உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 25 புதன்கிழமை (07-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:134

# மகிந்த ராஜபக்ஷ புதிய பிரதமர்

# நேற்றுக் காலை பதவி ஏற்றார்!



புதிய பிரதமர் பதவிப்பிரமாணம் செய்கிறார்.

## சகலருக்கும் உரிமைகள், சமத்துவம், சுபீட்சம்; புலிகளுடன் விரைவில் பேச்சு என்று உறுதி

கொழும்பு, ஏப்ரல்7

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களில் ஒருவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் புதிய பிரதமராக நேற்றுக்காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார். நாட்டில் உள்ள சகல இன மக்களுக்கும் உரிமைகளும் சமத்துவமும் வழங்கப்படும். சுபீட்சமான தேசம் கட்டியெழுப்பப்படும். இவற்றுக்காக ஜனாதிபதியுடன் தாம் இணைந்து செயற்படப்போவதாக அவர் உறுதியளித்தார்.**

நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில் புதிய பிரதமரின் பதவி ஏற்பு வைபவம் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின தலைவர்களும் சிரேஷ்ட உறுப்பினர்களும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் வாழும் சகல இன மக்களும் பரஸ்பர நல்லுறவுடனும் சமாதானமாகவும் வாழ வேணடும் என்பதே தனது நோக்கம் என்றார்.

நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் சமாதானப் பேச்சுக்களை ஜனாதிபதியே வழிநடத்துவார் என்றும் செய்தியாளர்களிடம் பிரதமர் கூறினார்.

பிரதமரின் தந்தையான பீ.ஏ.ராஜபக்ஷ ஸ்ரீல.சு.கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவராவார். 1947 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பெலியத்தைத தொகுதியின் பிரதிநிதியாக நாடாளு

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமல், நந்தன இருவருக்கும் அமைச்சர் பதவி வேண்டாமாம்!

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ மற்றும் அதன் சிரேஷ்ட உறுப்பினரான நந்தன குணதிலக்க போன்றோர் தாம் எந்த அமைசசுப் பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் தொடர்ந்து உறுப்பினர்களாக மட்டும் இருந்து மக்களுக்குச் சேவை செய்வதையே தாம் விரும்புகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஓரணியில்! பிளவு என்ற செய்திகளுக்கு முற்றுப்புள்ளி!!

கொழும்பு,ஏப்.7

வடக்கு, கிழக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு இடையில் எந்தப் பிளவுமில்லை. பிரதேசவாதமோ பிரிவோ இன்றி அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவர்.

மாவட்ட மட்டத்தில் தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இருபது பேரும் நேற்று ஒன்று கூடி ஒன்றிணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இதன்மூலம் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களிடையே பிளவு என்ற சாரப்பட அரச ஊடகங்களில் கடந்த சில நாள்களாகப் பரப்பப்பட்டு வந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டிருக்கின்றது.

'மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்ட கருணாவுக்கு ஆதரவாகத் தனித்து இயங்குவார்கள், அவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசுக்கு ஆதரவளிப்பார்கள்' என்று வெளியான செய்திகள் அனைத்தும் தவறு என்பதை இந்த எம்.பிக்கள் அனைவரும் ஒன்று திரண்டு உறுதிப்படுத்தினர்.

எல்லாப் பிரதேசங்களுக்கும் நன்மையளிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவோம். பிரதேசவாதத்துக்கு இடமேயில்லை. தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசிய நலன் என்பவற்றை விட்டுக் கொடுக்கமுடியாது. தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம். பிரிந்து நின்று செயற்படும் பேச்சுக்கே இடமில்லை" - என்றார் மட்டக்களப்பிலிருந்து தெரிவான கூட்டமைப்பு எம்பி. ஒருவர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் யார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படாத பட்சத்தில் மாவட்ட மட்டத்தில் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு: இளைஞர் பலி; மற்றொருவர் காயம்!

மட்டக்களப்பில் நேற்றுப் பிற்பகல 4 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

தாளங்குடா, கல்முனை வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்ட இளைஞரின் சட்டைப்பையில் இருந்த ஆவணத்தில் எஸ்சுரேஸ குமார் என்று குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் -

மகாலிங்கம் சத்தியசீலன் என்பவரே காயமடைந்தவர் என்றும் - காத்தான்குடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த இரு இளைஞர்களும், வாகனம் ஒன்றில் வந்த சிலரும் உரையாடிக்கொண்டிருந்தனர் என்றும் -

சிறிதுநேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் -


பொலீஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்னிரவுவரை எவரும் கைதுசெய்யபபடவில்லை. பொலீஸ் விசாரணை தொடர்கிறது. (ஒ-9-ரி)

ஜே.வி.பி. அங்கம் வகிக்கும்

## சு.கூட்டமைப்பு ஆட்சியமைக்க ம.ம.முன்னணி ஆதரவு வழங்காது

சந்திரசேகரன் எம்.பி. உறுதி



கிளிநொச்சி,ஏப்.7

ஜேவிபி. அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு மலையக மக்கள் முன்னணி என்றுமே ஆதரவு வழங்காது.

- இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன்.

கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திதது்க் கலந்துரையாடிய பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து செய்தி எடுத்து வந்து புலிகளின் பதில் பெற்றுச் செல்கிறோம்

கிளிநொச்சியில் மனோகணேசன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.7

கொழும்பிலிருந்து கொண்டுவந்த செய்திகளைப் புலிகளிடம் தெரிவித்துப் பதில் பெற்றுத்திரும்புகிறேன்.

- இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன்.

நேற்றுக் கிளிநொச்சி வந்த அவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச

(12ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே



NSB தேசிய சேமிப்பு வங்கி

# அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்ப அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும்!

## பௌத்த மதத் தலைவர்கள் வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.7

பொதுத் தேர்தல் முடிவடைந்த நிலையில் சகல இலங்கையரும் ஒற்றுமையாக சுபீட்சம் மிக்க அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்ப திடசங கற்பம் பூணவேண்டும்.

- இவ்வாறு பௌத்தமதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

மக்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும் என்று அமரபுரநிக்காயாவின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய வெலிகம ஞானரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஏனைய இனங்களையும் மொழிகளையும் மதங்களையும் மதித்து நிலையான சமாதானம் நிலைநாட்டப்பட்ட யுகத்தை உருவாக்குவதற்கு அனைவரும் உறுதிபூணவேண்டும். சகலரும் இலங்கையர் என்ற சிந்தனையில் செயறபட வேண்டும் என்று ராமன்ய நிக்காயாவின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய வேவல் தெனியே வேதாலங்கதேரர் தெரிவிததுள்ளார்.

அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய வரக்காவே தர்மாலோக தேரர், "நாட்டின் நலனுக்கு முன்னுரிமை வழங்கிச் சகல தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடந்தால் மாத்திரமே சமாதானத்தை அடைய முடியும்" என்றார்.

புதிய அரசு கௌரவமான சமாதானத்தை உருவாக்கத் தேவையான காரணிகளைப் பூர்த்திசெய்ய சகல தரப்பினருக்கும் பொறுப்புள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கைக்குரிய வெல்லன் விலவிமல்ரத்ன தேரர் கருத்து வெளியிடுகையில், சர்வமதத் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் பங்களிப்புகள் காரணமாகவே தேர்தல் அமைதியான முறையில் நடந்தேறியதாகவும் -

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி தலைமையில் உருவாக்கப்பட்ட தேசியக் குழுவின் திட்டங்கள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் - தெரிவித்தார். (ஒ-ரி)



நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

நள்ளிரவுவேளைகளில்

# ஊர்காவற்றுறைப் பகுதியில் ஆயுதக் கும்பல் நடமாட்டம்

ஊர்காவற்றுறை,ஏப்.7

ஊர்காவற்றுறையில் கடந்த சில நாள்களாக நள்ளிரவுவேளையில் இனந்தெரியாதவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் நடமாடி வருகின்றனர். இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது.

இந்த நபர்கள் கத்திகள், கொட்டன்கள், சைக்கிள் 'செயின்'கள் போன்றவற்றை வைத்துள்ளனர் என்றும -

எதிர்ப்படுபவர்களை அவர்கள் தடுத்து நிறுத்தி விசாரிப்பதுடன், சிலரைத் தாக்கியுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய கும்பல் ஒன்று அண்மையில் ஊர்காவற்றுறை, கரைச்சிப் பகுதியில் வீடுபுகுந்து தாக்கியதில் அப்பகுதியைச் சேர்ந்த கோ.ரஞ்சித்குமார் என்பவர் படுகாயமடைந்தார்.

இந்த ஆயுததாரிகளின் நடமாட்டத்தைத் தடுக்க பல்வேறு இடங்களிலும் பொதுமக்கள் குழுக்களாக இணைந்து இரவு வேளைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுழற்சி முறை அடிப்படையில் செயற்பட்டுவரும் பொதுமக்கள், விழிப்புக்குழுக்கள் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் குறித்துப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-17)

## சூட்டுக்காயத்துடன் சிப்பாய் மீட்பு!

குடத்தனை,ஏப்.7

பருத்தித்துறை, சக்கோட்டைப் பகுதியில் உள்ள காவலரண் ஒன்றிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சிப்பாய ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த காவலரண் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் -

அதனையடுத்து அப்பகுதியில் நின்ற ஏனைய சிப்பாய்கள் அங்கு சென்று பார்த்தவேளை மேற்படி சிப்பாய் சூட்டுக் காயங்களுடன் கிடந்தார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

காயத்துடன் மீட்கப்பட்ட சிப்பாய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. (ஒ-10-ரி)

## சட்டக்கல்லூரி பிரவேசப் பரீட்சை விரிவுரைகள்

சட்டக்கல்லூரிப் பிரவேசப் பரீட்சைக்கான விரிவுரைகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து 4 தினங்கள் காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ள விரிவுரைகள் யாவும் சட்டக்கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்படவுள்ளன.

# அறிமுகமற்ற நபரிடம் நகைவாங்கிய தென்மராட்சிவாசிக்கு நேர்ந்த அல்லல்

யாழ்ப்பாணம்,ஏப்.7

தென்னிலங்கையிலிருந்து வந்த ஒருவரிடம் வாங்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கமுலாம் பூசப்பட்ட நகையை யாழ்.நகரப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் அடைவுவைத்த நபர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

தென்மராட்சிப்பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு பொலீஸாரால் கைதாகியுள்ளார். குறிப்பிட்ட நபர், வங்கியில் தங்க நகைகள் என்றுகூறி அடகு வைத்த நகை தங்க முலாம் பூசப்பட்டது என்பது தெரியவந்தது. இதனையடுத்து வங்கி நிர்வாகம் இதுதொடர்பாகப் பொலீஸாரிடம் முறையிட்டது. இதுதொடர்பாகப் பொலீஸார் சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்தனர்.

அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. மேற்படி நகையைத் தென்னிலங்கையில் இருந்து வந்த ஒருவரே தனக்கு விற்றார் என்றும் -

அதனைத் தங்கநகை என்று நம்பியே தான் வாங்கி பணத்தேவைக்காக அடகு வைத்தார் என்றும் -

அந்த நபர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து, நன்கு அறிமுகமில்லாதவர்களிடமிருந்து நகைகள் உட்படப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது விழிப்பாக இருக்குமாறும் பொதுமக்களைப் பொலீஸார் எச்சரித்துள்ளனர். (ஒ-9-117)

# ஈ.பி.டி.பி. விருப்பு வாக்கு விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்டக்ளஸ் தேவானந்தா 9 ஆயிரத்து 405 விருப்பு வாக்குகளைப் பெற்று அக்கட்சியில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி. தலைமையிலான கூட்டணிக்கு ஓர் ஆசனம் மட்டும் கிடைத்தது.

அக்கூட்டணி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள ஒவ்வொருவரும் பெற்ற விருப்பு வாக்குகளை யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் விவரம் வருமாறு:-

கே.என்.டக்ளஸ் தேவானந்தா 9,405, கே.வி.குகேந்திரன் 3,279, கனகரட்ணம் மணிபல்லவராஜன் 3,182, தம்பித்துரை சிவகுமாரன் 2,493, திருநாவுக்கரசு சிறீதரன் 2,418, மகேஸ்வரி வேலாயுதம் 1,830 -

துரைராஜா பாஸ்கரன் 1,522, கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர் 1,486, நடராஜா மதனராஜா 1,476, பசுபதி சீவரட்ணம் 1,042, சங்கரப்பிள்ளை சிவதாஸன் 444, சின்னத்துரை தவராசா 449.

இவர்களில் கே.வி.குகேந்திரன், துரைராஜா பாஸ்கரன், நடராஜா மதனராசா, சங்கரப்பிள்ளை சிவதாசன் மற்றும் சின்னத்துரை தவராசா ஆகியோர் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)

# சுதந்திரக் கூட்டமைப்புக்கு மு.கா. ஆதரவு வழங்காது!

## கட்சிச் செயலாளர் நாயகம் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.7

நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றியமைத்து சிறுபான்மைச் சமூகத்தினரை நசுக்கி - ஒடுக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளை சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கான ஒத்துழைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்காது என அதன் செயலாளர் நாயகம் எம்ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்நிலையில், முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் ஆதரவை சுதந்திரக் கூட்டமைப்பு நாடியிருப்பதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாகக் கேட்டபோதே ஹஸன் அலி மேற்கண்டவாறு கூறினார்.

வெறுமனே அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்துகொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாரில்லை என்றும் ஹஸன் அலி உறுதியாகக் கூறினார். சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி ஐந்து, ஆறு மாதங்களில் தானாகக் கலைந்துவிடும் எனவும் அவர் சொன்னார்.

மு.கா. - ஐ.தே.கவுடன் செய்துகொண்ட தேர்தல் உடன்படிக்கையின பிரகாரம் ஐ.தே.க. தேசியப் பட்டியலில் இருந்து மு.காவுக்கு நான்கு ஆசனங்கள் நிச்சயமாகக் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்த ஹஸன் அலி அவற்றை யார், யாருக்குக் கொடுப்பது என்பதை கட்சித் தலைவரினால் தீர்மானம் செய்யப்பட்ட உயர்மட்டக் கமிட்டியே தீர்மானிக்கும் என்று கூறினார். (க)

# தோற்ற முஸ்லிம் வேட்பாளர்களின் பார்வை இப்போது தேசியப் பட்டியலில்!

கொழும்பு,ஏப்.7

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் முஸ்லிம் எம்.பிக்கள் பலரின் பார்வை இப்போது தேசியப் பட்டியலின் பக்கம் திரும்பியிருக்கிறது. இதனால், கட்சித் தலைவர்களுக்கு பெரும நெருக்குதல் கொடுக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முன்னாள் பிரதி அமைச்சர்களான பஷீர் சேகுதாவூத், நூர்தீன் மசூர் மற்றும் முன்னாள் எம்பிக்களான எம்.எஸ்.தௌபீக், திஸா தௌபீக், எம்.ஏ.மஹ்ரூப் ஆகியோருடன் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட சட்டத்தரணி எஸ்.நிஜாமுதீன், ஏ.எம்.நௌஷாத், புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் ஆகியோர் தமக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கபபடவேண்டும் என தலைவர் ரவூப் ஹக்கீமிடம் வலியுறுத்தியிருக்கின்றனர்.

அத்துடன், அவர்களது ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கில் கொழும்புக்குக் படையெடுத்து வந்து தமது வேட்பாளருக்கு எம்பி. நியமனம் வழங்கப்பட்டாகவேண்டும் என அடம்பிடித்து நிற்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் வேட்பாளரான முன்னாள் செனட்டர் மசூர் மௌலானாவுக்கும் எம்.பி. நியமனம் வழங்குமாறு மருதமுனை மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இவைதவிர, கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் பலரும் தம்மை தேசியப் பட்டியலின் மூலம் எம்பியாக நியமிக்குமாறு தலைவர் ஹக்கீமை வலியுறுத்திவருகின்றனர்.

கட்சியைப் பலப்படுத்தும் வகையில் தேசியப் பட்டியல் நியமனங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நெருங்கியவர்களுடன் மந்திராலோசனை நடத்தி வருகிறார். கடந்த காலங்களில் கட்சியில் பதவிகளைப் பெற்றவர்கள் பலர் பின்னர் கட்சிக்கும் தலைமைத்துவத்துக்கும் துரோகம் இழைத்ததோடு, கட்சியை அடியோடு அழிப்பதற்கும் முயற்சி செய்தனர் என்பதை ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ்"க்கு தேசியப் பட்டியலில் ஓர் ஆசனம் கிடைத்திருக்கிறது. அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்ட தேர்தல் உடன்படிக்கையில் மு.காவுக்கு ஐ.தே.க. தேசியப் பட்டியலில் நான்கு ஆசனங்கள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது. அதனை நேற்றுக்காலை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது மு.கா. தலைவர் ஹக்கீம் உறுதிப்படுத்திக் கொண்டார்.

தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக நியமிப்பது தொடர்பில் மு.கா. செயலாளர் நாயகம் எம்.பி. ஹசன் அலியின் பெயரை மாத்திரமே தலைவர் ஹக்கீம் தேர்தல் மேடைகளில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்த கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத், திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சம்மாந்துறை ஏ.எம்.நௌஷாத் ஆகியோருக்கும் தேசியப் பட்டியல் நியமனம் வழங்கத் தலைவர் ஹக்கீம் முன்வந்திருப்பதாக அறிய முடிகின்றது.

மற்றோர் ஆசனம் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மீதியுள்ள ஓர் ஆசனம் சுழற்சி முறையில் மூவருக்கு வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

ஐதேக. தேசியப் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், முன்னாள் எம்பிக்களான அலிஸாஹிர் மௌலானா, மயோன் முஸ்தபா ஆகிய மூவரில் இருவருக்கே எம்.பி. நியமனம் வழங்கப்படும் சாத்தியம் இருப்பதாக ஸ்ரீகோத்தா வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.ஏ.எல். ஹிஸ்புல்லா, முன்னாள் மு.கா. எம்.பி. எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் தம்மைத் தேசியப பட்டியல் எம்.பிக்களாக நியமிக்குமாறு கூட்டமைப்பின் மேலிடத்தைக் கோரி வருகின்றனர்.

ஏற்கனவே கூட்டமைப்பின் தேசியப் பட்டியலல் 'நுஆ' சார்பில் இடம்பெற்றிருக்கின்ற முன்னாள் எம்.பி. சேகு இஸத்தீனுக்குப் பதிலாக ஹிஸ்புல்லாவை எம்பியாக நியமிப்பதற்கு ஜனாதிபதி விரும்பியபோதிலும் அதனை 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது.

அத்துடன், அதாவுல்லா அணி சார்பில் கூட்டமைப்புத் தேசிய பட்டியலில் இடம்பெற்றுள்ள முன்னாள் மு.கா. எம்பி. அன்வர் இஸ்மாயில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறுவார் என நம்பகமாக அறியமுடிகிறது.

# இ.தொ.கா. சுதந்திரமான ஒரு குழுவாகவே இயங்கும்

## ஆறுமுகன் அடித்துக் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.7

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் சுதந்திரமான ஒரு குழுவாகவே இயங்கும். எந்த ஒரு கட்சியுடனும் அமைச்சர் பதவிக்காகப பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை என அடித்துக் கூறுகின்றார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ஜனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியுடன் இணையப்போகின்றது. அமைச்சுப் பதவிகளுக்காகப் பேரம் பேசுகின்றது என சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால், இது அப்பட்டமான ஒரு பொய் என்றும் ஆறுமுகன் கூறினார்.

இ.தொ.காவின் உண்மையான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் சில பத்திரிகைகள் கிளப்பி விட்டுள்ள சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையிலும் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று மாலை கொழும்பு டிரான்ஸ் ஏஸியா ஹோட்டலில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசுக்கு ஆதரவளிக்கும்படி இந்தியத் தூதுவர் எங்களுக்கு ஆலோசனை கூறவில்லை. இப்படி செய்தி வெளியிட்டது உண்மைக்கு மாறான ஒரு புரளி என்றும் ஆறுமுகன் விசனம் தெரிவித்தார்.

இ.தொ.காவிற்கும் இந்தியாவிற்கும பாரம்பரிய தொடர்புகள் உண்டு. நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இந்திய வம்சாவளியினர் என்ற வகையில் நாங்கள் இந்தியத் தூதுவருடன் நல்லெண்ண சந்திப்பு ஒன்றை நடத்தினோம் அவ்வளவு தான் என்றார் ஆறுமுகன் தொண்டமான்.

இ.தொ.காவின் தேசியப்பட்டியல் எம்.பியாக எம்.எஸ்.செல்லச்சாமியும், வி.புத்திரசிகாமணியும் இடம்பெறுவார்கள் என்றும் ஆறுமுகன் தொண்டமான் கூறினார்.

(க-ரி)

ஈராக்கில் மக்கள் கிளர்ச்சி வலுக்கிறது

# தீவிரப்போக்கு இஸ்லாமிய மதகுருவை கைதுசெய்ய அமெரிக்கப் படை முடிவு

## நிலைமையைச் சமாளிக்க மேலும் துருப்புக்களை அனுப்புகிறது


பக்தாத்,ஏப்.7

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு எதிராக ஷியா முஸ்லிம்கள் நடத்திவரும் கிளர்ச்சி தீவிரமடைந்திருக்கிறது.

இந்நிலையில் ஷியா முஸ்லிம்களின் தீவிரப்போக்கு மதத் தலைவரான மொக்டடா சடரைக் கைதுசெய்வதற்கு கூட்டுப்படைகள் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருக்கின்றன.

பெருகிவரும் மக்கள் கிளர்ச்சியைச் சமாளித்து அடக்குவதற்காக மேலும் துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்ப அமெரிகா தயாராகி வருகின்றது எனவும் கூறப்படுகின்றது.

சிறுபான்மை 'சுனி' முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த சதாம் ஹுசைனின் ஆட்சியில் ஈராக் இருந்தபோது பெரும்பான்மை ஷியா முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டனர்.



பலூஜா நகரில் ரோந்து சுற்றும் அமெரிக்கப் படையினர்.

இந்நிலையில், அமெரிக்கா தலைமையிலான படைகள் ஈராக்கை ஆக்கிரமித்து சதாம் ஆட்சியை வீழ்த்திய போது ஷியா முஸ்லிம்கள் அதை வரவேற்றனர்; ஆதரவு கொடுத்தனர். சுனி முஸ்லிம்களே பெரும்பாலும் ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதிவந்தனர். இந்நிலையில் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஒருவருட பூர்த்தியான கால கட்டத்தில் ஷியா முஸ்லிம்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தொடங்கினர்.

உலக அரங்கில்

ஷியா முஸ்லிம்களின் தலைவரான மெக்டாசடரின் நேரடி வழிகாட்டலில் வெளியான 'அல்-கௌசா' என்ற பத்திரிகை வன்முறையைத் தூண்டுகின்றது எனத் தெரிவித்து அதனை 'சீல்' வைத்து மூடின அமெரிக்கப் படைகள்.

அத்தோடு, சடரின் நெருங்கிய உதவியாளரான முஸ்தபா யகோரி என்பவரையும் கூட்டுப்படைகள் கைது செய்தன.

கடந்த ஆண்டு ஏப்ரலில் கொல்லப்பட்ட அப்துல் - மஜீத் அல்கோகி என்ற மதத் தலைவரின் மரணம் தொடர்பாகவே மேற்படி சடரின் உதவியாளர் கைதுசெய்யப்பட்டார் என்று கூட்டுப்படைகள் அறிவித்தன.

இதனையடுத்து ஈராக் எங்கும் ஷியா முஸ்லிம்கள் கிளர்ச்சியில் இறங்கினர்.

நஜாப் நகரில் கடந்த சனியன்று கூட்டுப்படை முகாமுக்குள் புகமுயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது படையினர் சுட்டதில் 20 பொதுமக்கள் பலியாகினர்; இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். கிளர்ச்சியாளரின் தாக்குதலில் கூட்டுப்படையினர் எண்மர் உயிரிழந்தனர்.

பக்தாத்துக்கு அண்மையில் அரசுக் கட்டடங்களை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த ஷியா பிரிவினர் மீதும் கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தின. 'அபாச்சி' ரக ஹெலிகொப்டர்களிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பலர் உயிரிழந்தனர்.

இவ்வாறு ஈராக்கில் பல இடங்களிலும் உள்ளூர் பொலீஸார் மீது தாக்குதல் நடத்தி பொலீஸ் நிலையங்களை கைப்பற்றுதல், அரச கட்டடங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் போன்ற கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஷியா முஸ்லிம்கள் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிரிட்டன் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுக நகரான பாஸ்ரா விலும் ஆளுநர் அலுவலகத்தை ஷியா முஸ்லிம்கள் கைப்பற்றினர்.

அதிகாலையில் ஆளுநர் அலுவலகத்தைத் தாக்கிய பெரும் கூட்டம், அலுவலகத்தை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து அங்கு பச்சைக் கொடியை ஏற்றியது. கூட்டத்தை சுற்றி தீவிரவாதிகள் ஆயுதங்களோடு நிறுத்தப்பட்டிருந்தனர்.

கட்டடத்தை கைப்பற்றுவதற்காக பிரிட்டிஷ் படைகள் அதை நெருங்கினால் அங்கு பெரும் சண்டை மூளலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்புலச் சூழலிலேயே மதத் தலைவர் மொக்டடா சடரைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைக் கூட்டுப்படைகள் விடுத்திருக்கின்றன.

கடந்த வருடம் படுகொலை செய்யபபட்ட அப்துல் - மஜீத் அல் கோகியின் கொலை தொடர்பாகவே இவருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மொக்டடா சடரைக் கைதுசெய்யக்கூட்டுப் படைகள் முயன்றால் மோசமான வன்முறை வெடிக்கலாம் என்று ஊகங்கள் கூறப்படுகின்றன.

இந்த நெருக்கடியான கட்டத்தில் தான் மேலதிக படைகளை ஈராக்கிற்கு அனுப்பத் தீர்மானித்திருக்கின்றது அமெரிக்கா.

தறபோது ஒரு லட்சத்து 55 ஆயிரம் கூட்டுப்படையினர் ஈராக்கில் உள்ளனர். அவர்களில் ஒருலட்சத்து 34 ஆயிரம் பேர் அமெரிக்கப்படையினர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# தலிபான் தீவிரவாதிகளைப் பாகிஸ்தான் ஒழிக்கவேண்டுமென அமெ. எச்சரிக்கை

வாஷிங்ரன்,ஏப்.7

பாகிஸ்தானின் எல்லையோரப் பிரதேசங்களில் பதுங்கியுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் அதற்கான பணியை ஆப்கானிஸ்தானில் உள்ள கூட்டுப் படைகள் மேற்கொள்ளவேண்டிவரும் என்று அமெரிக்கா எச்சிரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதரும் அதிபர் புஷ்ஷின் சிறப்புப் பிரதிநிதியுமான ஜல்மே கலீல் ஜாத் திங்கட்கிழமையன்று வாஷிங்ரனில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசினார். அப்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையோரப் பிரதேசங்களில் பாகிஸ்தான் பகுதியில் பழங்குடியினர் அதிகம் வாழ்கின்றனர். அவர்களிடையே தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளுக்கு அதிக செல்வாக்குக் காணப்படுகின்றது.

இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு தீவிரவாதிகள் அப்பகுதிகளில் முகாம்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர். அங்கிருந்து அவர்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நகர்ந்து அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பி மீண்டும் வந்துவிடுகின்றனர். இதனால் அமெரிக்கர்களுக்குப் பெரும் தலையிடியாக இருக்கிறது.

இவர்களைப் பிடிப்பதற்கு பாகிஸ்தான் படையினர் அண்மையில் பெரும் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பல நூற்றுக்கணக்கானோரைப் பிடித்து வைத்துள்ளனர்.

ஆனாலும் பாகிஸ்தானின் எல்லையோரப் பகுதிகளில் தீவிரவாதிகள் இன்னும் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்று அமெரிக்கா தெரிவிக்கின்றது.

"ஒன்று அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும். அல்லது இதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்று பாகிஸ்தான் அதிபரிடம் உறுதியாகத் தெரிவித்துவிட்டோம்" - என்றார் ஜல்மே கலீல் ஜாத்.

இதற்கான பணிகளில் பாகிஸ்தான் படையினருக்கு உதவுவதற்கு அமெரிக்கக் கூட்டணிப் படைகள் தயாராக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். தீவிரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தான் அரசும் ஒப்புக்கொண்டுள்ளது என்றார் அவர். (ம)

### ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்!

ஜேர்மனியில் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க அதிபர் ஜேரார்ட் ஸ்குருடர் எடுத்த அதிரடி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரைப் பதவி விலகக்கோரி லட்சக்கணக்கானவர்கள் கூடி நேற்று பேர்லின் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் என்ற பெயரில் அதிபர் ஸ்குருடர் முதியோர் ஓய்வூதியத்தைக் குறைத்தார். மருத்துவ மானியம் நிறுத்தப்பட்டது.

வேலையிலாத படித்த இளைஞர்களுக்குக் கிடைத்து வந்த சலுகைகளும் ரத்தாகிவிட்டன.

இவற்றைக் கண்டித்தே நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ம)

பிளாஸ்ரிக் சிகிச்சை மூலம்

# முகத்தோற்றத்தை மாற்றி தப்ப முயல்கிறார் தாவூத்!

## சர்வதேச பயங்கரவாதி குறித்துத் தகவல்

புதுடில்லி,ஏப்.7

இந்தியாவில் தேடப்பட்டுவரும் பயங்கரவாதிகளில் ஒருவரான, தலைமறைவு இயக்கத்தலைவர் தாவூத் இப்ராஹிமுக்குப் பாகிஸ்தானில் முகவடிவமாற்று அறுவைச்சிகிச்சை செய்யப்படுகிறது. தனது முகத்தோற்றத்தை மாற்றிக்கொண்டு வளைகுடா நாடுகளில் ஏதாவது ஒன்றுக்குத் தப்பிச் செல்ல அவர் திட்மிட்டுள்ளார் என்று அதிகார வட்டாரங்கள் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தன.

- இவ்வாறு அதிகார வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியச் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

அவை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியாவில் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டமைக்காக தாவூத் இபராஹிம்மை இந்தியா தேடி வருகிறது. இந்தியாவில் தேடப்பட்டுவரும் பயங்கரவாதிகளில் முக்கியமான 20 பேர் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களின் பட்டியலைப் பாகிஸ்தான் அரசிடம் அளித்து, அவர்களைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் என்று இந்தியா ஏற்கனவே கோரியுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் பணக்காரர்கள் வாழும் கிளிவ்டன் பகுதியில் ஆடம்பர பங்களாவில் 'அமீர் சாஹிப்' என்னும் 'இக்பால் சேட்' என்ற பெயரில் இதுவரை வசித்துவந்தார் தாவூத். அவரை சர்வதேச பயங்கரவாதி என்று அமெரிக்க அரசு அறிவித்தது. ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதி என்றும் அமெரிக்கா அறிவித்தது.

அதையடுத்து, பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் உதவியை நாடினார் தாவூத். அவருக்குப் பாதுகாப்பான தங்குமிடத்தை ஐ.எஸ்.ஐ. அளித்துள்ளது. ஐ.எஸ்.ஐ. அதிகாரிகளான மேஜர் காலிக், மேஜர் அக்பர் ஆகியோருடன் தாவூத்துக்கு நெருங்கிய தொடர்புள்ளது. அவர்களது ஆதரவுடன்தான் கராச்சியில் 'ஷேக் தாவூத் ஹஸன்' என்ற போலிப் பெயருடைய பாஸ்போர்ட்டில் வசித்துவருகிறார் தாவூத்.

அவரை அல்கெய்டாவுடன் தொடர்புடைய பயங்கரவாதி என்று அமெரிகா அறிவித்திருப்பதால் அவரால் வெளிநாடுகளுக்கு எளிதாகச் சென்று வர முடியவில்லை. எனவே 'பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை' மூலம் தனது முகத்தோற்றத்தை மாற்றி அமைக்க தாவூத் முடிவு செய்தார். இஸ்லாமாபாத்தில் அவருக்கு முகமாற்று அறுவைச் சிகிச்சை நடந்து வருகிறது. தனது முகத்தோற்றத்தை மாற்றிக்கொண்டு வளைகுடா நாடுகளில் ஏதாவது ஒன்றுக்குத் தப்பிச்சென்றுவிட அவர் திட்டமிட்டுள்ளார் என்று அதிகார வட்டாரங்கள் கூறின.

தாவூத்தின் கூட்டாளிகளான சோட்டா ஷக்கீல், டைகர் மேமன் ஆகியோரும் 1993ஆம் ஆண்டு மும்பைத் தொடர் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பயங்கரவாதிகள் ஆவர்.

- என்று தெரிவிக்கப்பட்டது.



இந்தோனேஷியாவில் பொதுத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்று வருகிறது. பப்புவா என்ற இடத்தில் பழங்குடியின மக்களுக்கான வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வாக்கைச் செலுத்தும் காட்சி இது.


## உடன் தேவை

கட்டட நிர்மாணப் பணிகளிலும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பப் பணிகள் சார்ந்த துறைகளிலும் அனுபவமும் அறிவுமுள்ள பராமரிப்பு மேற்பார்வையாளர் உடன் தேவை. இப்பதவிக்கு ஆண்பாலாரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் தமது சுயவிவரங்கள், பணி சார்ந்த அனுபவங்கள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/34245) (11-17)

எமது ஸ்தாபனம் ஆரம்பித்து மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ள
இந்த மகிழ்ச்சிகரமான வேளையிலே

மாபெரும் விசேட தள்ளுபடி

எமது வாடிக்கையாளர்களுக்கு **ஓர் அரிய வாய்ப்பு!**

*நீங்கள் கொள்வனவு செய்யும் விலையிலிருந்து*
*விசேட தள்ளுபடி* **10%**

☆ திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்
☆ நவநாகரிக நாரீமணிகளுக்கேற்ற புத்தம் புதிய சாறிவகைகள்
☆ ஆடவருக்கேற்ற சேட்டிங், சூட்டிங் வகைகள்
☆ சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள்
☆ வகை வகையான துணி வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
☛ ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

இல.10.11
நவீன சந்தை,
சாவகச்சேரி.

**வாணி ரெக்ஸ்**

81, GRAND BAZAAR
JAFFNA
021 222 5578

(சி34086) (21-13-19)


## நெஞ்சை விட்டு அகலாத நினைவஞ்சலியும்
## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும்

10ஆம் ஆண்டு | 31ஆம் நாள்





அமரர் பண்டிதர்
**கணபதிப்பிள்ளை சிவசம்பு**

திருமதி
**பஞ்சசோதி சிவசம்பு**

| | | |
|---|---|---|
| 06.06.1913 | தோற்றம் | 15.10.1916 |
| 01.04.1994 | மறைவு | 10.03.2004 |

ஈரைந்து மாதங்கள் எமைச் சுமந்து ஈன்றெடுத்து
அன்போடும் பாசத்தோடும் வளர்த்து ஆளாக்கினீர்கள்!
நாள்கள் பல கடந்தாலும் வருடங்கள் சென்றாலும்
எம் உயிருடன் கலந்து எம் நெஞ்சில் அணையாத தீபங்களாயிருக்கும் அன்னை - பிதாவின
ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

09.04.2004 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தொம்பை வீதி, உடுவில்.* - மக்கள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

(30473)(30-21-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 – 03 – 1933 | 19 – 03 – 2003 |

அமரர் **செல்லப்பா பரமானந்தம்**

திதி: துதியை

எங்கள் அன்புத் தெய்வமே! அப்பா!
எம்மை ஆறாத் துயரில் விட்டுவிட்டு நீங்கள்
இறைவனடி சேர்ந்து ஓராண்டும் ஆனதப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தெளிந்த நீரோடை
போன்ற முகமும் மலர்ந்த செந்தாமரை போன்ற
கபடமற்ற சிரிப்பும் இதயத்துக்கு இதமான பேச்சும்
இல்லையென்னாத ஈகைக் குணமும் இறை பக்தியும்
கொண்ட எங்களது அன்புள்ள அப்பாவே!
உங்களின் நினைவு நீங்கள் செய்த செயல்களால் எங்கள் மனங்களில்
என்றென்றும் நீங்காது நிலைத்திருக்கும் அப்பா!

இன்று (07.04.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.**

*54/12, பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.* (30509)(21-13-19)

துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்
### குத்தகைக்கான விண்ணப்பம் கோரல்

சகல நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும்

குத்தகைக்கான விண்ணப்பப்படிவங்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலை O.P.D. காரியாலயத்தில் உண்டு. பெறவிரும்புபவர்கள் 100/= ரூபா செலுத்தி 15.04.2004இற்கு முன் "தலைவர், சங்கானை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

*அபிவிருத்திச்சபை,
ச.அ.வைத்தியசாலை.* (30529)

**சைவப்பிதா பொன் சாம்பசிவம்**
தலைவர். (21-13-19)

## துயர் பகிர்கின்றோம்

*எமது பாடசாலை ஆசிரியை திருமதி நித்திகல்யாணி ஜெயக்குமாரன்
அவர்களின் அன்புக் கணவர்*

### அருணாசலம் ஜெயக்குமாரன்

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் கவலையும் வேதனையும் அடைகின்றோம். இவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச
வித்தியாலயம்.* (30530)(21-19-13)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## 15ஆம் ஆண்டு நினைவலைகள்



| அவனியில் | அவனடியில் |
|---|---|
| 22 - 11 - 1943 | 07 - 04 - 1989 |

அமரர்
## கனகரட்ணம் பரராஜசிங்கம்
(முன்னாள் உதவி அரச அதிபர், குச்சவெளி)

எம் உள்ளத்து சிறைகளில்
குடியிருக்கும் உத்தமரே!
வஞ்சமற்ற நெஞ்சத்தோடு
வசந்தத்து வாழ்வதை
ஊர் போற்ற வாழ்ந்தவரே!
ஆண்டுகள் பதினைந்து ஆனபோதும்
ஆறவில்லை எம்மனது
பாவியர் நாம் பரிதவிக்க
பரமனடி சேர்ந்ததும் ஏனோ?

*15,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.* (30571)(22-13-19)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உற்றார், உறவினர்.**

## 10ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர்
### சிவானந்தராஜா தயானந்தன்
(தயா)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.05.1974 | 07.04.1994 |

*பாராட்டிச் சீராட்டிப் பக்குவங்கள் பல சொல்லி
ஊர்புகழும் நாயகனாய் உத்தமனாய் திகழ்வீர் என
பெற்றோரும் உடன் பிறந்தோரும் காத்திருக்கும் போது
இவ்வுலகை விட்டு நீர் பறந்துதான் சென்றீரோ?
நீர் மறைந்து பத்தாண்டுகள் பறந்தோடிப் போனாலும்
இன்னும் நெகிழுதையா உம்மை எண்ணி எம் மனது!*

*வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.* (30526)(21-13-19)

**- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னப்பு தர்மராசா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு தர்மராசா அவர்கள் 02.04.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2004) புதன்கிழமை காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு (கைதடி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி **சாந்தம்,**
மகன் **சதீசன்,**
**மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

*கைதடி தெற்கு,
கைதடி.* (30521)(21-13-19)

உதயன்

## கதிர்காமருக்கு இது நல்ல படிப்பினை!

இலங்கையின் புதிய பிரதமராக முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றிருக் கின்றார்.

அவருக்கும் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடை யில் அப்பதவிக்கு நடந்த இழுபறியில் கடைசியில் வென்றார் ராஜபக்ஷ.

பிரதமர் பதவிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் தேர்வு கதிர்காமர்தான். ஜனாதிபதியின் விருப்பப்படி அப்பதவிக்கு கதிர்காமர்தான் நியமிக் கப்படுவார் எனப் பலரும் நம்பினர்; எதிர்பார்த்தனர். 'இலங்கையின் முதல் தமிழ்ப் பிரதமர்' என்ற பெரு மையை கதிர்காமர் பெறுகின்றார் என்று பரபரப்பாகச் செய்திகள் கூட வெளியாகின. ஆனால், கடைசி நேரத்தில் எல்லாம் 'அவுட்'!

ஆனால், இலங்கையின் தேசிய அரசியலில் தமிழர் ஒருவருக்குரிய இடம் என்னவென்பதை உணர்ந்தி ருந்த எவரும், கதிர்காமர் பிரதமர் பதவியை எதிர் பார்த்தால் அது வெறும் நப்பாசைதான் என்பதை அறியாமல் இருக்கவில்லை.

தான் தமிழன் என்பதை மறந்து, தனது இனத் துக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையைத் துறந்து, சிங்களப் பேரினவாதத்துக்கு ஆலவட்டம் பிடித்து, தமிழரின் உரிமைப் போராட்டத்தைச் சர்வதேச ரீதியில் கொச்சைப்படுத்தும் பேரினவாதப் பணிக்குத் துணை போன கதிர்காமருக்கு, இப்போதைய நிகழ்வுகள் நல்ல பாடமாக அமைந்திருக்கும் என நம்பலாம்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பதவிக்கு இலங்கைத் தரப்பால் நிறுத்தப்பட்டு, சர்வ தேச ரீதியில் அவமானப்படுத்தப்படும் வகையில் - இழுக்குப் பெறும் விதத்தில் - அவர் தோற்கடிக்கப் பட்டபோது சிங்களத் தலைமையின் மத்தியில் தமது நிலை என்னவென்பதை அவர் உணர்ந்திருப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

அது இப்போது அவருக்கு உறுதிப்படுத்தி உணர்த் தப்பட்டிருக்கும் என நம்பலாம்.

கதிர்காமர் பிரதமர் என்ற முடிவு, சகல நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியினால் - தமது கட்சியின் மீதும் அக்கட்சி சேர்ந்துள்ள கூட்ட மைப்பின் மீதும் அதிக செல்வாக்குக் கொண்ட தலை வியினால் - எடுக்கப்பட்டும் கூட, அது முறியடிக்கப் பட்டிருக்கின்றது. தமிழர் ஒருவர் பிரதமராகும் வாய்ப்பு சுலபமாகத் தட்டிப்பறிக்கப்பட்டிருக்கின்றது.

பேரினவாதத்தின் செல்வாக்கும் இனவாதப் போக்கும் இந்த விவகாரத்தில் எவ்வளவு தூரம் உறுதியாக வெளிப்பட்டிருக்கின்றது என்பதிலிருந்து கதிர்காமர் பாடம் படித்துக்கொள்ளாவிட்டால் அவ ருக்கு இனிமேல் திருந்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கவே கிடைக்கமாட்டாது.

எனினும் இனவாதத்தைக் கக்காத - அமைதி முயற்சியில் சிரத்தையுடைய - மிதவாதப் போக்கு டைய - ஒருவர் பிரதமர் பதவிக்கு வந்திருப்பது ஓர ளவு ஆறுதல் தரும் விடயந்தான்.

நாட்டில் வாழும் சகல இன மக்களும் பரஸ்பர நல்லுறவுடனும், சமாதானத்துடனும், அமைதியுடனும் வாழவேண்டும் என்பதே தனது நோக்கம் என்று கூறியிருக்கின்றார் புதிய பிரதமர்.

நீண்டகாலம் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக விடுதலைப் புலகளுடன் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண் டும் என்ற தமது விருப்பையும் அவர் வெளியிட்டிருக் கின்றார்.

அமைதி இல்லாமல் - சமாதானம் நிலவாமல் - நாடு படும் கஷ்டம் தொடர்பான ஆதங்கத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனாலும், பேரினவாத சக்திகளின் பிடியில் சிக் குண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பின் சார்பில் பிரதமராக இருந்துகொண்டு -

அதுவும், அவரது சிறுபான்மை அரசைக் கவிழ்க் கக்கூடிய நிலையில பௌத்த மதவெறியும் இனவாதப் போக்கும் கொண்ட சில சக்திகள் எதிரணியில் பலத் தோடும் எந்த நேரமும் தயார் நிலையில் நிற்கும் போது -

இனவாதப் போக்கில் அதிகம் சிரத்தையற்ற புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் அமைதி முயற் சிக்கு ஆக்கபூர்வமாக என்ன செய்துவிட முடியும்?

தமிழரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்துவிடமுடி யும்? - என்ற கேள்வி எழுமபுவது தவிர்க்கமுடியாததே.

இனவாத சக்திகளின் சகதிக்குள் சிக்கியிருக்கும் புதிய பிரதமர் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார்? - பொறுத்திருந்து பார்ப்போமே!

# தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் முறைகேடுகள் எவையும் இல்லை

## தெரிவத்தாட்சி அலுவலர் பத்மநாதன் உறுதி

யாழ்ப்பாணம்,ஏப்7

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரசஅதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான செ.பத்மநாதன்.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ். மாவட்டத் தைப் பொறுத்தவரை தேர்தல் வன்முறைகள் மற்றும் முறை கேடுகள் குறைந்திருந்தன. தேர்தல் சுமுகமான முறையில் நடந்துமுடிந்துள்ளது. ஆங்காங்கே சில வாக்குச்சாவடிகளில் குளறுபடிகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றனவே தவிர அவை தொடர்பாக எமக்கு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.

முறைகேடுகள் இடம்பெற்றதாக அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடுகளைத் தெரிவித்தபோதும் அவற்றை அவர் நிராகரித்துவிட்டார்.

தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு முன்னர் சில அசம்பாவிதங் கள் இடம்பெற்றதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவற்றை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் எனக்கு வழங்கப்பட வில்லை.

யாழ. மாவட்டத்தில் சிறந்த முறையில் தேர்தல் நடைபெற்ற தனையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். சிறந்த முறையில் தேர்தலை நடத்துவதற்கு எனக்குப் பலரும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தா கட்டும்.

வாக்குகள் எண்ணப்படும்போது எமது அலுவலர்கள், சில அரசியல் கட்சி உறுப்பினர்களால் அச்சுறுத்தப்பட்ட சம்பவங் களும் இடம்பெற்றுள்ளன. இருந்தபோதும் எவற்றையும் பொருட் படுத்தாது அவர்கள் தமது பணிகளைச் செம்மையாகச் செய்துள் ளனர்.

தேர்தலில் முறைகேடுகள் இடம்பெறக்கூடாது என்ற கார ணத்தினால்தான் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான இடங்கள் இறுதி நேரத்தில் அறிவிக்கப்பட்டன.

எவ்வித அசம்பாவிதங்களும் இல்லாது நெகிழ்ச்சியாகத் தேர்தலை நடத்துவதற்கு யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி யும் அவரின் கீழ் இயங்கும் படையினரும் உதவிபுரிந்தனர். அதேபோல பொலீஸாரும் எமக்குத் துணையாக நின்று செயற் பட்டனர். அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

எனவே, தேர்தலைச் சுமுகமாக நடத்தி முடிப்பதற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்கள். குறிப்பாக உள்ளூர், சர்வதேச கண் காணிப்பாளர்கள் மற்றும் உள்ளூர் சர்வதேச தொண்டு நிறுவ னங்களின் பிரதிநிதிகள் எமக்கு வழங்கிய சேவை என்றும் மறக்கமுடியாதது - என்றார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், உதவித் தேர்தல் ஆணையாளர் சி.நடராசா உட்படத் திணைக்களத் தலைவர்கள், செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-5)

# கடந்தகால யுத்தத்தின் எதிர்விளைவைப் புரிந்துகொண்டு புதிய அரசு புலிகளுடனான பேச்சுகளைத் தொடரவேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.7

கடந்தகால யுத்தக் கொள்கையின் எதிர்விளைவுகள் எவ் வாறு நாட்டையும் மக்களையும் நாசப்படுத்தின என்பதை ஜனாதிபதியும் அவரது கொள்கை வகுப்பாளர்களும் உணர்ந்து கொண்டு புலிகள் இயக்கத்துடனான சமாதானப் பேச்சுகளைத் தொடரவேண்டும்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செய லாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடந்துமுடிந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் அர்த்தமற்றதும் மக்களது வரிப்பணத்திலிருந்து சுமார் நூறு கோடி ரூபாய்களை வீணடித்ததுமான ஒரு தேர்தல் என்ப தையே அதன் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை நாடாளுமன்ற ஆட்சி அதிகாரத்திற்குக் கொண்டுவரும் நோக்கி லேயே இத்தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால், அந்த முன்னணி 105 ஆசனங்களை மட்டுமே பெற்று அறுதிப் பெரும்பான்மை பலமற்ற ஓர் அரசை உருவாக்கும் நிலையே தோன்றியுள்ளது. இது, விரைவில் நாடு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந் திக்க வேண்டிய சூழலை உருவாக்கவே செய்யும். இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் பேரினவாத, முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளுக்கிடையிலான போட்டிக்குரிய தேர்தல்களே அன்றி நாட்டின் வளர்ச்சிக்கோ, மக்களின் சுபீட்சத்துக்கோ, பிரச்சினைகளின் தீர்வுக்கோ உரிய தேர்தல்கள் அல்ல என்ப தையே இத்தேர்தல் முடிவுகள் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தி யுள்ளன.

மீண்டும் மீண்டும் தேர்தல்களை நடத்தி நாடு எதிர்நோக்கி நிற்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின் அவசியத்தையும் பொருளாதாரப் பிரச்சினைகளின் பூதாகரத்தையும் மறைத்து திசைதிருப்பிக் கொள்வதிலேயே இரண்டு பேரினவாத முதலா ளித்துவ ஆளும் வர்க்கக் கட்சிகளும் ஈடுபட்டு வந்துள்ளன. இவ்வாறு அடிக்கடி தேர்தல்கள் வருவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள இன்றைய அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கு இரு கட்சிகளுமே தயாரில்லாத நிலையில் இருந்து வருவதையே காணமுடிகின்றது. இதன்மூலம் இரண்டு ஆளும் வர்க்கக் கட்சி களும் தேசிய இனப்பிரச்சினை உட்பட நாடு எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண்பது தமது உயர் வர்க்க ஆட்சியதிகாரத்தை மக்கள் மீது திணித்துத் தமது நலன் களையும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள் என்பதே உண்மையானதாகும். இதன் மற்றோர் எதிர்விளைவாகவே ஜாதிக ஹெலஉறுமய இத்தேர்தலில் செல் வாக்குப் பெற்று பௌத்த சிங்கள அடிப்படைவாதம் நாடாளு மன்ற அரசியலில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளவும் முடிந் துள்ளது. இது அபாயகரமான ஒரு வெளிப்பாடாகும்.

நடந்து முடிந்த தேர்தல் மூலம் அறுதிப் பெரும்பான்மை அற்ற ஓர் அரசு தோற்றுவிக்கப்பட்டுள்ளபோதிலும், நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்ற அதிகாரமும் ஒரே தலைமையிடம் வந்துள்ளமை இரட்டை அதிகார இழுபறிக்கும் அரசியலமைப்பு நெருக்கடிக்கும் முடிவு ஏற்பட்டுள்ளது. அதேநேரம், எதிர்த்தரப் புக்கு மாறியுள்ள ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, தனது எதிர் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவே செய்யும். ஆனால், ஜனாதிபதியும் அரசும் நாட்டின் பிரதான பிரச்சினை யான தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எத்தகைய அணுகு முறையையும் செயற்பாட்டையும் முன்னெடுத்துச்செல்லப்போகி றார்கள் என்பதைச் சற்றுப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள் ளது. ஆனால், கடந்த கால யுத்தக்கொள்கையின் எதிர் விளைவு கள் எவ்வாறு நாட்டையும் மக்களையும் நாசப்படுத்திக் கொண் டன என்பதனை ஜனாதிபதியும் அவரது கொள்கை வகுப்பாளர் களும் உரிய பட்டறிவாகக் கொண்டு தேசிய இனப்பிரச்சினை யின் தீர்வுக்கு புலிகள் இயக்கத்துடனான பேச்சை ஆக்கபூர்வமாக ஆரம்பித்து முன்னெடுப்பதற்கு முன்வரல் வேண்டும் என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டுகின்றது - என்றுள்ளது. (ம-8)

# கோழி இறைச்சி, முட்டை பயம் ஏதுமின்றி உண்ணலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

சந்தேகம், பயம் ஏதுமின்றி கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றை உணவாக உட்கொள்ளலாம் என்று 'பயப்பட வேண்டாம்' என்ற தலைப்புடன் விவசாய மற்றும் கால்நடை அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏனைய ஆசிய நாடுகள் சிலவற்றில் உள்ளது போன்று இலங்கையில் பறவைக் காய்ச்சல் நோய் இல்லை. எனவே, பயமின்றி கோழி இறைச்சி, முட்டை என்பனவற்றை உணவாக உட்கொள்ளலாம். (ம-185)

# சங்கீத சபை கருத்தரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.7

வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் வதிவிடக் கருத்தரங் கின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 6.30மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூ ரியில் நடைபெறவுள்ளது.

காலை 7மணி முதல் 8மணி வரை துறைசார் பயிற்சிகள் இடம்பெறும். பயிற்சிகளை சங்கீத ஆசிரியர் திருமதி வ.ரவீந் திரன், திருமதி ப.செல்வேந்திரகுமார், மிருதங்க வித்துவான் ப. சின்னராசா, நாடக ஆசிரியர் சி.சிவராஜன் ஆகியோர் வழங்குவர்.

தொடர்ந்து இளைப்பாறிய அதிபர் ஆர்.நடராஜா தலைமை யுரை நிகழ்த்துவார். பின்னர் 'கற் பித்தல் முறைகள்' என்னும் பொரு ளில் யாழ்பல்கலைக்கழக கல்வி யியற்றுறைத் தலைவர் மா.சின் னத்தம்பி கருத்துரையாற்றுவார்.

தொடர்ந்து பயிலுநர்களின் கலைநிகழ்ச்சிகளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடை பெறவுள்ளன. (ம-ரி-6)

**நாளை**

பங்குனி 25
புதன்கிழமை
(07.04.2004)
திதி : துதியை
பகல் 1.40 வரை.
நட்சத்திரம் : சுவாதி
பகல் 5.06 வரை
சுபநேரம்: 4.37 - 6.07
ராகுகாலம்: 12.07 - 1.37
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தோல்வியைக் கண்டு துவ ளாதே. வெற்றியைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாதே.

## கீரிமலை நகுலேஸ்வரத்தில்

# வாகனத் தரிப்புக்கும் நீராடவும் வரி அறவிட மீண்டும் நடவடிக்கை

தெல்லிப்பழை,ஏப்.7

கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு வரும் யாத்திரிகர்கள், பக்தர் களிடமிருந்து வாகனங்களை நிறுத்துவதற்கும் புனித நீராடுவ தற்கும் மீண்டும் வரி அறவிட வலி.வடக்கு பிரதேச சபை தீர்மா னித்துள்ளது.

கீரிமலை புனிதத்தலப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சிக்க முன்னர் அத்தலத்தின் பராமரிப்புப் பணிகளை வலி.வடக்கு பிரதேச சபை நிர்வாகமே மேற்கொண்டு வந்தது.

பராமரிப்பு செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு அங்குவரும் யாத்திரிகர்கள், பக்தர்களிடம் வாகனப் பாதுகாப்பு, புனித நீராடுதல் போன்றவற்றிற்கு கட்டணங்களை பிரதேச சபை அற விட்டு வந்தது.

மேற்படி தலம், உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கிய பின் இந்த நடைமுறைகள் இல்லாது போனது. தற்போது நில வும் இயல்பு நிலையினால் இப்புனித தலத்திற்கு பக்தர்கள் வந்து போகின்றனர். மேலும் இத்தகைய பராமரிப்புப் பணிக ளில் ஈடுபடப் பிரதேச சபை ஊழியர்களையும் படைத்தரப்பு அனு மதித்துள்ளது. இதனை அடுத்து மேற்படி வரி அறவீடு நடவடிக் கைகளை மீண்டும் மேற்கொள்ளப் பிரதேசசபை நிர்வாகம் தீர்மா னித்துள்ளது. (ம-150)




# யாழ் மண்ணில் விண் தொடர்பு

"துராயா" செய்மதி தொலைப்பேசி (GSM, GPS உடன்)

- ✻ 99 நாடுகளுடன் உடன் நேரடி இணைப்பு.
- ✻ மேலும் 85 நாடுகளுடன் GSM இணைப்பு.
- ✻ வரும் அழைப்புகள் இலவசம்.
- ✻ துராயா-துராயா தொடர்பு விசேட கட்டணம்.
- ✻ முதல்/ பின் பணக் கொடுப்பனவு வசதி, விரும்பில்.

~~Rs.66,000/=~~

10% புத்தாண்டு கழிவு




THURAYA

## டயலொக் SAT

141, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு: 0777 332227, 0777 331336, 0212 226223

# மூலிகைகள் பக்கவிளைவுகள் இல்லாதவை; தீங்குகள் எதுவும் தராத மருந்து உணவுகள் அவை

**1991**ஆம் ஆண்டு தீவக இடப்பெயர்வின்போது இடம்பெயராது தனித்து விடப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த எமது மக்களின் துன்ப அவலநிலையில் மனநிலை, உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தவேளையில் என்னைப் போன்ற சிலரின் உதவி அவசியமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கால வேளையில், மனநிலை உடல்நிலை பாதிக்கப்படாதிருக்க வேண்டுமென அகதிமுகாமாக இருந்த வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் நானும் அவர்களோடு ஒருவராக இருந்து அவர்களுக்குச் செப்பியவையாகும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கு இணங்க நாம் தேகாரோக்கியமாக வாழவேண்டும். நோய் வந்தபின் வைத்தியம் செய்ய முயற்சிப்பதைவிட வருமுன் காப்போம் என்ற முறையினைக் கடைப்பிடிக்க வேண்டும். நலமுடன் வாழ சிறந்த வழி சுத்தமாக இருப்பதும் நல்ல போஷாக்குள்ள உணவுமேயாகும். அதற்கு இருக்கவே இருக்கிறது. நம்மைச் சுற்றி பச்சைப் பசேலென வளர்ந்திருக்கும் செடிகொடிகள். இதனை மருத்துவ உலகில் மூலிகைகள் என அழகாக அழைப்பர்.

1. சுகத்துடன் ஒருவர் சிக்கனமாகவும், ஆரோக்கியமாகவும் பலசாலியாகவும் வாழ.

2. நோயுற்றவர் பலவித மருந்துகளை உள்ளெடுத்து பக்கவிளைவுகள் ஏற்பட்டால் கஷ்டப்படுவார்கள்.

3. உணவில் அதிக விருப்பமின்றி இருப்பவர்கள்.

4. அன்றாட வாழ்வில் பல கறிகளுடன் வயிறார சோறு சாப்பிட வழியற்றவர்கள்.

5. குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்.

இவர்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படும் சிறந்த உணவு கஞ்சியேயாகும். இதனை நாம் நாள்தோறும் தயாரித்து உட்கொள்ளவேண்டும். நாம் பின்னே கூறப்போகும் கஞ்சி என்னும் ஆகாரம் திரவமும், திண்மமும் சேர்ந்த உணவாகும். கஞ்சி பலவகைப்படும்.

*(அ) உப்புக் கஞ்சி அல்லது சாதாரண கஞ்சி.*

சேரும் பொருள்கள்:-

தீட்டிய நெல்லரிசி, சர்க்கரை/கற்கண்டு, முளைத்த பயறு, தேங்காய்ப் பால், உப்பு தேவையான அளவு.

அரிசியைச் சுத்தம் செய்து கழுவி நீர்விட்டு அடுப்பேற்றி அவிக்கவேண்டும். அவிந்தபின் பயறு, பால், சர்க்கரை, உப்பு சேர்த்து நீராகாரமாக எடுத்தல் வேண்டும். (4 பங்கு நீர் விட்டு ஒரு பங்காக வற்றவைத்தல்) இதனை இளஞ்சூடாக இருக்கும் போதே அருந்துதல் வேண்டும்.

உணவில் விருப்பமின்றி இருப்பவர் சுரத்தினால் பீடிக்கப்பட்டு வாய்க்கசப்பு ஏற்பட்டு அரோசகத் தன்மையில் இருப்பவர், பால், சர்க்கரை சேர்க்காது தனித்து உப்புக் கஞ்சியாகவே பருகுதல் வேண்டும்.

*(ஆ) இரண்டாவது வகையில் நோய்களின் வகைக்கேற்ப குறிப்பிட்ட மூலிகைகளின் இலை, தண்டு எடுத்து சாறுபிழிந்து முற்கூறிய கஞ்சிப் பாகத்தைப்போல் செய்து சாறையும் சேர்த்துக் காய்ச்சி எடுப்பது. இதனை இலைக்கஞ்சி என்பர்.*

(1) நிலபாகல் - மலக்கட்டு.

(2) தூதுவளை - சளி இருமல், சுவாசாயரோகம்.




(3) மொசுமொசுக்கை - சளி, இருமல், சுவாசாயரோகம்.

(4) வல்லாரை - ஞாபகசக்தி, நரம்புரமாக்கி.

(5) பொன்னாங்காணி - பொன் மேனியாக தேககாந்தி உண்டாக்கும். நரம்புரமாக்கி.

(6) மணற்தக்காளி - குளிர்ச்சி உண்டாக்கி.

(7) தவசி முருங்கை - உடல் உரமாக்கி.

(8) கொத்தமல்லிக்கீரை - குளிர்ச்சி உண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, மணமூட்டி.

(9) பசளி - மலமிளக்கி, குளிர்ச்சி உண்டாக்கி.

(10) கங்கூன் கீரை - கைகால் பிடிப்பு, குத்து உளைவு.

(11) முடக்கொத்தான் - கைகால் பிடிப்பு, குத்து உளைவு.

(12) சண்டி - கைகால் பிடிப்பு, குத்து உளைவு.

(13) சிறு குறிஞ்சா - சலரோகம் (நீரிழிவு).

(14) அகத்தி - வாயவியல், வயிறு அவியல், நெஞ்சு, வயிறுளிவு.

மேற்கூறிய வகைகளில் ஏதாவது ஒரு இலைச்சாற்றுடன் கஞ்சி தயாரித்தல். இதில் சேரும் பொருள்களாவன:- அரிசி, சர்க்கரை/கற்கண்டு/பனங்கற்கண்டு/சீனி, முளைத்த பயறு, தேங்காய்ப்பால், உழுந்து, இலைச்சாறு, நெய்/மாஜரின், உப்பு, ஏலம், கறுவா.

அரிசியை நெய்யில் வறுத்தும் செய்யலாம். நெய்/மாஜரீன் கிடைக்காவிடில் அரிசியை நீர்விட்டு அவித்துப் பின்னர் உழுந்து, முளைத்த பயறு என்பனவற்றையும் போட்டு அவியவிட வேண்டும். பின் சர்க்கரை பால், உப்பு, இலைச்சாறு சேர்த்து நன்கு அவியவிட வேண்டும். முன் கூறியவாறு கஞ்சிப் பாகத்தில் இறக்கி இளஞ்சூடாக உண்ணவேண்டும்.

சில குறிப்பிட்ட நோய்க்குரிய மூலிகைகளைத் தவிர பெரும்பாலான மூலிகைகளின் சாற்றில் காய்ச்சும் கஞ்சியை சுகதேகிகளுக்கும் அருந்தக் கொடுக்கலாம். இதில் குறிஞ்சா, முருக்கம் இலை, நிலபாகல் போன்றவை அந்த நோய்க்குரியவரே பாவிக்க வேண்டும. மற்றையவை எல்லோரும பயன்படுத்தலாம்.

இதைவிட மேலும் சளிச்சுரம், இடைவிடாது தும்மல், தொடர்ந்து மூக்கால் நீர் வெளியேறுதல் போன்றவற்றிற்கு நமது முன்னோர் கைக்கொள்ளுவது ஒரு வகைக் கஞ்சியேயாகும். இதனை சரக்குக் கஞ்சி அல்லது புளிக்கஞ்சி அல்லது மஞ்சள் கஞ்சி எனப்பல பெயர்களால் அழைக்கப்படும்.

*இ). சரக்குக்கஞ்சி அல்லது புளிக்கஞ்சி அல்லது மஞ்சள்க்கஞ்சி*

சேரும் பொருள்கள்:- குத்தரிசி, மஞ்சள், மிளகாய், கொத்தமல்லி, உள்ளி, உப்பு, நற்சீரகம், மிளகு, தேங்காய்ப்பால், வேர்க்கொம்பு, புளி, கொத்தமல்லிக்கீரை.

அரிசியைச் சுத்தமாக்கி நீர்விட்டு நன்கு வேகவைத்து புளி, உப்பு, தேங்காய்ப்பால் தவிர்ந்த ஏனையவற்றை அரைத்துக் கூடாக எடுத்துப் பாலில் கரைத்து வெந்துகொண்டிருக்கும் அரிசிக்குள் போட்டு உப்பும், கரைத்த புளியும் சேர்த்து நன்கு வேகவிட வேண்டும். கொத்தமல்லிக் கீரை இலையையும், வாசனைக்காக சேர்த்துக் கொள்ளலாம். இதனை இறக்கி இளஞ்சூடாக இருக்கும் போதே சாப்பிடவேண்டும். இதனைத் தொடர்ந்து 2,3 நாள்கள் சாப்பிட்டு வர சளிச்சுரம், இடைவிடாத தும்மல் தொடர்ந்து மூக்கால் நீர் வடிதல் போன்ற நோய்கள் குணமடையும்.

*இதேவேளை, வேர்க்கொம்புக்கூழ் எனப்படும் ஒருவகையுணவும் நமது வழக்கில் உண்டு. இவ்வுணவு உடல் ஆதாரத்திற்கும், உடலில் வேறு நோய்கள் அணுகாவண்ணம் இருப்பதற்கும் கிழமையில் ஒருநாள் சுகதேகி ஒருவர் உணவாக உட்கொள்வதாகும்.*

தேவையான பொருள்கள்:- அரிசிமா, சர்க்கரை/கற்கண்டு, வேர்க்கொம்புமா, தேங்காய்ப்பால், ஏலக்காய், உழுத்தம் மா, கறுவா, பயற்றம் மா, பெருங்காயம், எள்ளுப்பொடி, உப்பு.

மேற்கூறிய நான்கு வகை மாக்களையும் ஒன்று சேர்த்துக் கலந்து கொள்ளவேண்டும். கொதிக்க வைத்த தேங்காய்ப்பாலுடன் சர்க்கரை/கற்கண்டு கரைத்து மற்றும் பொருள்களையும் பொடிசெய்துப் பாலுடன் சேர்த்துக் காய்ச்சி ஒன்று கலந்த மாவினையும் சேர்த்து நன்கு கிளறி கூழ்பபதமாக இறுகியதும் இறக்கி ஆறவிட வேண்டும். பின்னர் கரண்டியால் எடுத்துச் சாப்பிடவேண்டும். இது தாது புஷ்டிக்குச் சிறந்த உணவாகும்.

இதைவிட பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் குருதிப் பெருக்கிற்கு:-

முள் முருக்கம் இலை, குறிஞ்சா இலை, பூவரசம் இலை இம்மூன்று இலைகளில் ஏதாவது ஒன்றை அரிசி மாவுடன் சேர்த்து இடித்துப் பிட்டு அவித்து சாப்பிட்டு வரக் குணம் கிடைக்கும். உதிரப் பெருக்கு குறையும் வரை சாப்பிட வேண்டும்.

நற்சீரகம், மஞ்சள், உள்ளி, இஞ்சி இவற்றை அரைத்து நீர்விட்டுக் காய்ச்சிக் கூழ் போன்று குடிக்கலாம். சோற்றுடன் சேர்த்து உள்ளெடுக்கலாம். அன்றியும் அரைத்த கூட்டுச் சரக்கைப் பனங்கட்டியுடன் உட்கொள்ளலாம்.

இதைவிட, வேப்பம்பட்டை, வேர்க்கொம்பு, வேப்பங்காம்பு, நற்சீரகம், மஞ்சள், சர்க்கரை யாவற்றையும் உலர்த்தி இடித்துத் தூளாக எடுத்து சர்க்கரை சேர்த்து லேகிய பதமாகக் காய்ச்சி, தினம் இருவேளை இலந்தைப்பழம் அளவு வெந்நீரில் உட்கொள்ளலாம். அல்லது சர்க்கரை இன்றி கஷாயம் செய்தும் குடித்து வரச் சுகம் கிடைக்கும்.

**ஜீவாகாரம்**

இது தயாரிக்கப்பட்ட ஒருவகை உணவு. இது பக்கெட்டுக்களில் கிடைப்பது தெரியும். இது சமைத்த உணவு. தேவையான நேரம் சர்க்கரை சேர்த்தோ தேங்காய்ப்பால் சேர்த்தோ உண்பதாகும்.

சேரும் பொருள்கள்:- பொரியரிசி -65%, சோயா -25%, உழுந்து -10%

அரிசியைச் சுத்தம்செய்து வறுத்து இடித்து எடுத்தல் , உழுந்து தோல் நீக்கி வறுத்து இடித்து எடுத்தல், சோயாவைத் தோல் நீக்கிக் கழுவி வறுத்து இடித்து எடுத்தல், இம்மூன்றையும் ஒன்றுசேர்த்து அதில் 1-2 மேசைக்கரண்டி எடுத்து சீனியுடன் கலந்து வெந்நீர் அல்லது பால் சேர்த்துப் பிசைந்து உருண்டையாக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும். வளர்ந்த பிள்ளைகளும் பெரியவர்களும் தேவையான அளவு எடுத்துத் தேங்காய்த்துருவல் சேர்த்தும் பால் அல்லது வெந்நீர் சேர்த்து பிசைந்து உருண்டைகளாக்கியும் சாப்பிடலாம். விரும்பினால் வாழைப் பழத்துடனும் சேர்த்துச் சாப்பிடலாம், இதனால் மேலும் புரதமும் சக்தியும் அதிகரிக்கின்றது.

மேற்கூறப்பட்ட கஞ்சி வகை, கூழ் வகை, ஜீவாகாரம் போன்றவை, நமது இடங்களில் கிடைக்கக்கூடிய நிறையுணவாகும். எந்த நேரமும் வீடுகளில் மிகவும் சுலபமாகத் தயாரிக்கக்கூடிய உணவாகும். பெரியவர்கள், குழந்தைகள் விரும்பி உண்ணும் உப உணவாகும்.

**செல்வி கலாநிதிதேவி பொன்னையா**
*பிரதம சித்த வைத்திய அதிகாரி,*
*சித்த மருத்துவப் பகுதி,*
*யாழ். மாநகரசபை*

ஆனால், இது முக்கியமாக மந்த போஷணையுடைய பிள்ளைகள், கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், நலிந்தவர்கள், உண்ண வேண்டிய உப உணவு. இதனை மாற்றுணவாகவும் உப உணவாகவும் தத்தம் வசதிக்கேற்ப எடுத்துக் கொள்ளலாம்.

ஆங்கில வைத்தியமாகிய அலோபதியில் நோய் விரைவில் மாறிவிட வேண்டும் எனக் குளிகைகளை அடிக்கடி எடுத்து உடன் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வர். ஆனால், அதில் பல பக்கவிளைவுகளும் ஏற்படுவதை அவர்கள் தம் வாயால் கூறுவதைக் கேட்கின்றோம். உதாரணமாக பனடோல் காய்ச்சலுக்கு எடுக்கின்றனர். உணவில் விருப்பமில்லை என சாப்பிடாது விடும்போது வயிற்றில் என்ன செய்கின்றது? வயிற்றில் உள்ள நொதியங்களுடன் சேர்ந்து உள் உறுப்பை அரிக்கின்றது. வயிற்று வலி, குமட்டல், நோவு, அரோசகம் ஏற்படுகின்றது. அதனால் மீண்டும் அதற்கு வைத்தியம் செய்யவேண்டி இருக்கின்றது.

இதேபோன்று முட்டுவியாதி PREDNISOLON எடுப்பவர், முகவீக்கம், சலக்கடுப்பு என்பர். கைகால் நோவு பிடிப்பு என்று BRUPAN, INDO METHAZINE எனப் பாவித்தவர், சலக்கடுப்பு, வயிற்றுவலி, நோ எனக் கூறுவதைக் காண்கின்றோம்.

எனவே, ஒரு வருத்தத்திற்கு வைத்தியம் செய்து பிறிதொரு வருத்தம் ஏற்படுவதுடன், பணச் செலவும், நோயாளர் வேதனையை அனுபவிப்பதுடன் பலவீனமும் அடைகின்றனர்.

எனவே, அலோபதி சென்று துன்பப்படாது உங்கள் கையிலேயே உங்களுக்குத் தேவையான மூலிகைகள் உண்டு. இதனை மருந்தாகவும் உணவாகவும் உட்கொண்டு ஆரோக்கியமாக வாழுங்கள். மூலிகைகள் பக்கவிளைவற்ற தீங்கற்ற மருந்துணவாகும்.

*

# புற்றுநோய் அறிகுறிகளை இனங்கண்டு கொள்வதன்மூலம் அதனால் உண்டாகும் பாதிப்புகளைக் குறைக்கமுடியும்

**'புற்றுநோய்' தொடர்பாக கட்டுரையாளர் ச.ஆ.கோபாலமூர்த்தி எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி கடந்த 24.03.2004ஆம் திகதி 'உதயனின்' சுகநலம் பகுதியில் 'புற்றுநோய் தொடர்பான அறிவு யாழ். மக்களுக்குப் போதாது' என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

இந்தக் கட்டுரை புற்றுநோயினால் இறந்த ஒரு பெண்ணின் நினைவாக, பொதுமக்களுக்குப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக எழுதப்படுவதால், பெண்களுக்கு மாத்திரம் ஏற்படும் சில முக்கிய புற்றுநோய்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண் உறுப்பின் முன்புறமாக உள்ள மன்மதக்குமிழ்- எனப்படும் பகுதி (சாதாரண மக்களால் வெங்காயத்தோல் என அழைக்கப்படும்) தோல் உறை ஒன்றினால் மூடப்பட்டிருக்கும். இந்தத் தோலுறை விரிக்கத் தக்கதாகவும், பின்னோக்கி இழுக்கத்தக்கதாகவும் அமைந்திருக்கும். இந்தத் தோலுறையை நாள்தோறும் விரித்துப் பின்னோக்கி இழுத்துச் சுத்தமான தண்ணீரில் மன்மதக்குமிழைக் கழுவுவது. ஆணுறுப்பைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறை ஆகும்.

ஆணுறுப்பு நிமிர்ந்து நிற்கும் சந்தர்ப்பத்தில் தோலுறையைப் பின்னோக்கி இழுக்கும்போதும், பின்னோக்கி இழுக்கப்பட்ட தோலுறையை முன்னோக்கி இழுத்து மன்மதக்குமிழை மூடும்போதும் சிலருக்கு நோவு ஏற்படுவதுண்டு. இதனால் இவர்கள் மன்மதக்குமிழைக் கழுவிச் சுத்தமாக வைத்திருப்பதில்லை. வேறு சிலர், தோலுறை விரிக்கத்தக்கது - பின்னோக்கி இழுக்கத்தக்கது என்பதை அறியாதவர்களாக இருப்பதனாலும் மன்மதக்குமிழைக் கழுவிச் சுத்தம் செய்வதில்லை. இதனால், இப்பகுதியில் வைரசுக்கள், பக்டீரியாக்கள், பங்கசுக்கள் போன்றவை வளரும் வாய்ப்பும் உண்டு. புற்றுநோயைத் தோற்றுவிப்பதாகக் கூறப்படும் ஹியுமன் பப்பிலோமா (HPV) வைரசு இப்பகுதியில் பெருக்கமடைந்தால் மதக்குமிழில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

ஆனால், இந்த வைரசு ஆண்களுக்குப் புற்றுநோய் ஏற்படுத்தும் சந்தர்ப்பம் குறைவாகவும், பெண்களுக்குப் புற்றுநோய் ஏற்படுத்தும் சந்தர்ப்பம் அதிகமாகவும் காணப்படுகின்றதாம். எனவே, ஆணுறுப்பைச் சுத்தமாக வைத்திருக்காத ஆணுடன் உடலுறவு

**ச.ஆ.கோபாலமூர்த்தி**

வைக்கும் பெண்ணுக்கு கருப்பைக் கழுத்துப்புற்றுநோய் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. ஆண்கள் தோலுறையைப் பின்னோக்கி இழுத்துக் கழுவ முடியாவிட்டால் அதனைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிடுதல் நன்று. ஆண்கள், தோலுறையை அகற்ற வேண்டுமென்பது ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களது (சுண்ணத்து) கடமையென, அம்மதத்தில் கூறப்படுவதால், அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் தமது ஆண் உறுப்பின் சுத்தத்தை நன்கு பேணுகிறார்கள். ஆரோக்கிய வாழ்வு வாழ்கின்றனர்.

திருமணத்துக்கு ஏற்ற ஜோடிகளைத் தெரிவுசெய்யும்போது இருபாலாரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, ஆரோக்கியப் பொருத்தம் பார்ப்பது ஒரு சுகாதாரமான திருமணமுறையாகும். ஆனால், இந்த நடைமுறை இன்னமும் எமது நாட்டில் ஏற்படவில்லை. வைத்திய பரிசோதனையின் போது, ஆண் தனது உறுப்பை முறைப்படி கழுவிச் சுத்தம் செய்கிறாரா? அவரது ஆண் உறுப்பில் நோய் ஏதாவது இருக்கிறதா? என்பதும், பெண்ணுக்குப் பெண் உறுப்பில் நோய் ஏதாவது உண்டா? கருத்தரிப்பதைத் தடுக்கும் காரணிகள் ஏதும் உண்டா? பெண்ணின் இரத்தம் RH+ ஆகவும் ஆணின் இரத்தம் RH- ஆகவும் இருந்து, இரத்தப் பொருத்தமின்மை காணப்படுகிறதா? என்ற முக்கிய விடயங்களையெல்லாம் அறியமுடியும்.

சைவசமயிகள் திருமண ஏற்பாடுகள் செய்யும்போது ஆணின் ஜாதகமும் பெண்ணின் ஜாதகமும் பொருத்தமாக அமைகின்றனவா என ஆராய்கின்றார்கள். இதனால் பலர் (வயது வட்டுக்குள் போன நிலையிலும்) நடுத்தர வயது கடந்துவிட்டாலும் ஜாதகப்பொருத்தம் அமையாவிடில், திருமணம் செய்யாமல் ஒண்டிக்கட்டைகளாகவே வாழ்கிறார்கள்.

ஆனால், ஜாதகம் ஒருவரது பால் உறுப்பில் நோய் இருக்கிறதா என்பதைக் காட்டாது. நோயுற்ற ஒருவருக்கு ஜாதகம் பொருந்தியது எனச் செய்யப்படும் திருமணத்தின் முதல் இரவே நோய்த் தொற்றை ஏற்படுத்தும் இரவாகவும் இருக்கும் வாய்ப்பு உண்டு. திருமணம் செய்வதற்கு முன்னர் இருபாலாரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி ஆரோக்கியப் பொருத்தம் பார்ப்பது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும்.

**பாப்சிமியர் பரிசோதனை**

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தோன்றும் சாத்தியக் கூற்றைக் காட்டும் பாப்சிமியர் (PAP SMEAR) பரிசோதனை தேர்ச்சிபெற்ற வைத்தியர் ஒருவராலேயே செய்யப்படும். இப்பரிசோதனையின் போது யோனி நன்கு விரிக்கப்பட்டு அவதானிக்கப்படுவதாலும், கருப்பைக் கழுத்தும் அதன்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையில் சண்முகநாத மகாவித்தியாலயத்துக்கு அருகில் 9 பரப்புக் காணியில் அமைந்த வீடும், 5பரப்புக் காணியில் மற்றொரு வீடும், வித்தியாலயததுக்கு மேற்குப் பக்கத்தில் 2½ பரப்பு வளவும் விற்பனைக்குண்டு (இரண்டு வீடுகளுக்கும் தண்ணீர்த் தாங்கிவசதி, வீட்டுடன்/ வெளியே மலசலகூடம், குளியலறைகள்) தொடர்பு: அஞ்சலோ, வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை. (30513)

## தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தைச் சேர்ந்த நடராசா தர்சினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (837051703V), விசேட அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ தவறிவிட்டது. (ஓட்டுமடத்திற்கும் முளாய்க்கும் இடையில்) தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

(30533)

## சம்பள, ஓய்வூதிய கொடுப்பனவுகள் இந்தவாரம்

கொழும்பு,ஏப்.7

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும், ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் இவ்வாரம் வழங்கப்பட இருக்கின்றன.

ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக ஓய்வூதியப் பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ண தெரிவித்தார்.

ஓய்வூதிய ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது பற்றி விசேட செயலகப் பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-ரி)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

வடமராட்சி,ஏப்.7

அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்திலும், சக்கோட்டை புனித சவேரியார் சனசமூக நிலையத்திலும் நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இப்பகுதிகளில் வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் தவறாது தடுப்பூசி மருந்தினை ஏற்றிக் கொள்ளுமாறு அல்வாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி. நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ம-173)

# புற்றுநோய் அறிகுறிகளை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அயற்பகுதிகளும் நன்கு அவதானிக்கப்படுவதாலும் இப்பகுதிகளில் புண், அரிப்பு போன்றவை இருக்கின்றனவா என ஆராயவும் அவற்றைப் பற்றி அறியவும் அதிக வாய்ப்பு உண்டு. பெண் உறுப்பினுள் நுண்ணங்கிகள் வளர்ந்து, கண்டிடியாஸிஸ் (CANDIDIASIS) ற்றைகோ மொனாசிஸ் (TRICOMONASIS) போன்ற நோய்கள் காணப்படின் அதனால் ஏற்படும் வெள்ளைபடுதலையும் சாதாரண வெள்ளைபடல் என அலட்சியம் செய்யாது உடனடியாக அவற்றுக்குச் சிகிச்சைபெறவும் வழி ஏற்படும். கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுக்கவும் வாய்ப்பு ஏற்படும். வருமுன் காப்பதே உகந்த வழியாகும்.

ஏனைய புற்றுநோய்களையும் புற்றுநோய் அறிகுறிகளையும் புற்றுநோய்களை ஏற்படுத்தும் காரணிகளைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டு இக்கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது.

ஆரோக்கியக்கேடான வாழ்க்கை முறை, மாசடைந்த சூழலில் வாழ்தல், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புடைய தொழில்களைச் செய்தல், கதிரியக்கத்திற்கு உட்படுதல், கதிரியக்கமுள்ள இடங்களில் கதிரியக்கப் பாதுகாப்பு உடையணியாது தங்கியிருத்தல், புகைப்பிடித்தல், மூக்குத் தூள் உபயோகித்தல், புகையிலை, பாண்பராக் போன்றவற்றை மெல்லுதலும், அவற்றை வாயினுள் வைத்துக் கொண்டு துயிலுதலும், புகையிலையைச் சேர்த்து வெற்றிலை மெல்லுதலும் அதனை வாயினுள் அடக்கியபடி நித்திரை செய்தல்.

பீடி, சிகரட், கஞ்சா, புகைத்தல், மது உட்படப் பல்வேறு போதைப் பொருள்களை நுகர்தல், மந்த போஷணை, ஹோமோன்கள் அடங்கிய மருந்துகளைக் கண்டபடி பயன்படுத்துதல், அங்கீகரிக்கப்படாத நிற மூட்டிகளையும், வாசனையூட்டிகளையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்ணுதல், வாசனைத் திரவியங்களை பால் உறுப்புகளில் பூசுதல் அல்லது விசிறுதல்.-

பெண்களைத் திருப்திப்படுத்த முடியாத ஆண்கள் உடலுறவு நேரத்தை நீடிப்பதற்காக 'டிலே ஸ்பிறே' (Delay Spray) எனப்படும் மருந்தை ஆண் உறுப்பில் தெளித்தல், உறுத்தும் பற்கள் அல்லது உறுத்தும் கட்டுப் பற்களுடன் வாழ்தல், பங்கசு வளர்ந்த உணவுகளை உண்ணல் (பெட்டியில் அடைக்கப்பட்டு விற்கப்படும் கேக் வகைகளில் பங்கசுகளின் வளர்ச்சி பெருமளவு காணப்படலாம்), உடலை அரிக்கும் இரசாயனப் பொருள்களை நெடுங்காலம் கையாளதல் என்பன புற்றுநோயை ஏற்படுத்தத் தக்கவை எனக் கூறப்படுகிறது.

பின்வரும் அறிகுறிகள் புற்றுநோயைக் காட்டுபவையாக இருக்கலாம். இத்தகைய, அறிகுறிகள் காணப்பட்டால் வைத்திய ஆலோசனை பெறுவது அவசியமானதாகும்.

1. நீண்டகாலம் நீடிக்கும் இருமல்.
2. நீண்டகாலம் நீடிக்கும் புண்.
3. தழும்பு, மச்சம், திற்பலி அல்லது பாலுண்ணி என்று அழைக்கப்படும் தோல் முடிச்சுக்களில் ஏற்படும் நிறமாற்றம் அல்லது அசாதாரண வளர்ச்சி.
4. மார்பகங்களிலுள்ள தோலிலிருக்கும் துவாரங்கள் விசாலமாகித் தோடம்பழத் தோலிலுள்ள துவாரங்களைப் போலத் தோன்றுதல்
5. முலைக்காம்பு உள் இழுக்கப்படல் அல்லது முலைக்காம்பில் வேறு மாற்றங்கள் தோன்றல்.
6. கருவுற்றிருக்கும் சந்தர்ப்பம் அல்லது குழந்தையைப் பெற்று பாலூட்டும் நிலையில் இருக்காத பெண்களது முலைக் காம்பைப் பிதுக்கிப் பார்க்கும்போது திரவம் ஏதாவது வெளியேறல்; முலைக்காம்பை பிதுக்கும் போது இரத்தம் வெளியேறல்
7. மலத்துடன் அல்லது சிறுநீருடன் இரத்தம் வெளியேறல்.
8. மலசலம் கழிக்கும் வழமையான ஒழுங்கில் மாற்றம் ஏற்படல்.
9. ஆண்களுக்கு சிறுநீர் கழிப்பது சிரமமாக இருத்தல் அல்லது சிறுநீர் கழிக்கமுடியாதிருத்தல்.
10. நீடித்திருக்கும் அஜீரணம், வயிற்று நோவு.
11. விழுங்குவதில் சிரமம் தோன்றல்
12. மாறிமாறி வரும் காய்ச்சல்.
13. வாயின் உட்புறத் தோலில் வெள்ளை நிறம் தோன்றல்.
14. யோனிச் சூழல் (Vulva) பகுதித் தோலில் வெள்ளை நிறம் தோன்றுதல்.
15. அசாதாரண சோர்வு.
16. மாதவிடாய் வற்றலின் (Menopose) பின்பு ஏற்படும் குருதிப் போக்கு.

மேற்குறிப்பிட்டவை மார்பகப் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், குதப்புற்று நோய், புரஸ்ற்றேற் புற்றுநோய், சிறுநீர்ப்பை புற்றுநோய், களப் புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய், சதையில் புற்றுநோய், சூலகப் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், சுவாசப்பைப் புற்றுநோய் போன்ற பல புற்றுநோய்களுக்குக் காணப்படும் அறிகுறிகளின் தொகுப்பாகும்.

இத்தகைய அறிகுறிகள் தோன்றினால் வைத்திய ஆலோசனை பெற வேண்டும். புற்றுநோயெனக் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாகச் சிகிச்சை பெற்றுப் பலனடையவேண்டும். புற்றுநோய் பற்றி விழிப்புணர்வு பெறுவோம். மகிழ்ச்சியுடன் வாழ்வோம். பிறரையும் மகிழ்ச்சியுடன் வாழவைப்போம்.

(முற்றும்)

# அருமை மகளுக்குப் பாராட்டு



செல்வி
## துஷாந்தி சிறிஸ்கந்தசெல்வன்
சட்டமாணிப் பட்டம் பெற்ற

செல்வி துஷாந்தி சிறிஸ்கந்தசெல்வன் அவர்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபரில் கொழும்பு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற சட்டத்தரணிகளுக்கான (Attorney At Law) பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் திறமையாகச் சித்தியடைந்து தகைமை பெற்றிருக்கிறார். அவரைப் பாராட்டுவதுடன் அவர் தனது துறையில் மேலும் முன்னேறிப் புகழ் பெறவேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்,
அப்பம்மா மற்றும் குடும்பத்தினர்.

தகவல்:
செல்லத்துரை சிறிஸ்கந்தசெல்வன் (தந்தை)
அமைப்பாளர் - காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.
59, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
158 (114), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C/34251)(21-13-19)

# பிறந்தநாள் வாழ்த்து

சிவனேந்திரன் - ஜெசிந்தா
தம்பதிகளின் செல்வப்புதல்வி
## S.லக்சிகா

03.04.2004 அன்றைய தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.04.2004) புதன்கிழமை தாவடியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். அவரை நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அப்பம்மா (தவமணி),
P.ஜெயந்திரன் குடும்பம்.
(30563)(21-13-19)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

## திரு.கி. சிவநேசன்



உழைப்பவர் வாழ்வுயர உன்னத நிலையடைய களைப்பின்றி உழைத்திட்ட உத்தமன் சிவநேசன் நாடாளுமன்றம் செல்லும் பதவிதனைப் பெற்றதை ஏராளம் மக்கள் வாழ்த்தும் இனிய வேளையில் எம் குடும்பத்தின் இதய வாழ்த்துக்கள்.

(30535)(40-13-19-21)
திரு.மு.செல்லத்தம்பி குடும்பத்தினர்,
கரவெட்டி கிழக்கு.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- Royal Industries, Colombo. ☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில் →

# பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்



காங்கேசன்துறை வீதி. நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் யாழ். பிரதம தபாலக முன்னாள் உத்தியோகத்தரும் சிறந்த சமூக சேவையாளருமான

உயர்திரு.
## சிவானந்தம் இரங்கநாதன்
J.P.

அவர்கள் 01.03.2004இல் யாழ். மேலதிக நீதிவான் திருமதி எஸ். நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவரது சேவை மேன்மேலும் நல்ல முறையில் தொடர வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
நாகவி கிறீம் ஹவுஸ்,
133/10 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(30525)(40-21-13-19)

உ
வல்லிபுரேசன் துணை

# திருமாங்கல்யதாரணம்

அன்புடையீர்!

ஸ்ரீமந் சங்கரநாராயணனின் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 25ஆம் நாள் இன்று (07.04.2004) புதன்கிழமை சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும், துதியைத் திதியும், குருவோரையும் கூடிய சுபவேளையாகிய காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ
கணபதிசுவாமிக்குருவின் பௌத்திரனும்
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி ஜனார்த்தனசர்மா**
அவர்களுக்கும்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோயில், மந்துவில் அம்மன் கோயில்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ
ப.வேதக்குட்டிக்குருவின் பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ வே.நடராஜக்குரு
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமாகிய
**சௌபாக்கியவதி காயத்திரி**
அவர்களுக்கும்

பெரியோர்கள் நிச்சயித்தபடி பாணிக்கிரகண திருமாங்கல்யதாரண விழா நடைபெற ஸ்ரீவல்லிபுரமாயவனதும், நடராஜ இராமலிங்கேஸ்வரரினதும் திருவருள் கைகூடியுள்ளது. மணமகளில்லத்தில் நடைபெறும் மேற்படி வைபவத்திற்கு, எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் புதன் அதிகாலை 5 மணி மணமகனில்லம். வதூவரகிருகப் பிரவேசம் புதன் மாலை 5 மணி மணமகனில்லம்

வரவேற்பு : வியாழன் மணமகனில்லம்

தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குருக்கள் (J.P.) தம்பதியினர்,
பிரதமகுரு, ஸ்ரீ வல்லிபுராழ்வார் சுவாமி கோயில்
சிவன்கோயில், ஆவரங்கால்.

பிரம்மஸ்ரீ வே.நடராஜக்குருக்கள் (J.P.) தம்பதியினர்,
பிரதமகுரு, நடராஜ இராமலிங்க சுவாமி கோயில், சிவன் வீதி, ஆவரங்கால்.

வரவேற்பாளர்கள்

திருமதி க.கணபதிசுவாமிக்குரு (பேர்த்தி).
பிரம்மஸ்ரீ க.இராமச்சந்திரக்குரு குடும்பத்தினர் (மலேசியா).
பிரம்மஸ்ரீ க.புருஷோத்தமக் குரு (J.P.) குடும்பத்தினர்
(பிரதம குரு ஸ்ரீ வல்லிபுராழ்வார் சுவாமி கோயில்).
பிரம்மஸ்ரீ க.கணபதீஸ்வர சர்மா தம்பதிகள்.
பிரம்மஸ்ரீ க.கிரீநர சர்மா.

பிரம்மஸ்ரீ வே.தியாகராஜசர்மா குடும்பத்தினர்.
பிரம்மஸ்ரீ வே.சரண்யபுரீஸ்வர குரு குடும்பத்தினர்.
பிரம்மஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக்குரு குடும்பத்தினர்.
பிரம்மஸ்ரீ ந.யோகானந்தேஸ்வரக் குரு தம்பதியினர்.
பிரம்மஸ்ரீ நே.சுதாகரக் குரு-தம்பதியினர்.
பிரம்மஸ்ரீ ஸ்ரீநரசர்மா தம்பதிகள்.
பிரம்மஸ்ரீ பா.கிருஷ்ணகுமாரக்குரு தம்பதியினர்.

இரு வீட்டார் அழைப்பு

(சி-30551)(37-13-19-21)

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# தமிழர் அபிலாசைகள் நிறைவேறினால் மட்டுமே இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படமுடியும்

## ஜெனிவா 'பொங்குதமிழ்' பேரணியில் விடுக்கப்பட்ட பிரகடனத்தில் தெரிவிப்பு

ஜெனிவா,ஏப்.7

எமது அரசியலில் அபிலாசைகளும் அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத்தீர்வு ஒன்று கிட்டும்.

ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் திரண்டு வந்த ஈழத்தமிழர்கள் சுவிற்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் ஐ.நா. அலுவலகம் முன்பாகப 'பொங்கு தமிழை' நடத்தினர்.

அங்கு வெளியிடப்பட்ட 'பொங்கு தமிழ்' பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர்கள் ஒரு தேசியத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சரித்திர காலம் முதற்கொண்டு வாழ்ந்துவரும் தாயகம் ஒன்று அவர்களுக்கு இருக்கின்றது. தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே. விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசானைகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

எமது அரசியல் அபிலாசைகளும் அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அமைதியான தீர்வொன்றை உருவாக்கமுடியும் என்பதை இலங்கை அரசுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்தின் 60ஆவது அமர்வில் உலக நாடுகளினதும் அரச சார்பற்ற அமைப்புகளினதும் தலைவர்கள் பெரிய எண்ணிக்கையில் கலந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் எமது தாயகத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுள்ள பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ள அபிலாசைகளை நாம் சர்வதேச சமூகத்துக்கும் வலியுறுத்துகின்றோம். ஐ.நா. சபை இந்த அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு உதவவேண்டும்.

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் வீடுகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இராணுவம் விலகிச் சென்றிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. ஒப்பந்தம் இவ்வாறு மீறப்பட்டிருப்பதை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம். உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களின் வீடுகளில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றி அங்கு மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் ஆயுதப் படைகளின் பிரதம தளபதியையும் கேட்டுக்கொள்கின்றோம்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் அரசியல், பொருளாதார, சட்ட வல்லுநர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ள புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அப்பாவிகளாகவும் குற்றச்சாட்டுகள் எதுவுமின்றியும் தெற்குச்சிறைச் சாலைகளில் வாடுகின்ற இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள சகல நாடுகளும் அவர்களைத் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்கள் மீதான தடைகளை நீக்கவேண்டும்.

நிரந்தரமான தீர்வு ஏற்பட்டுச் சமாதானம் நிலைநாட்டப்படும் வரையில் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் அங்குள்ள தமிழ் அகதிகளைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பலாகாது.

- இவ்வாறு அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## ஜெனிவா 'பொங்குதமிழில்' 12ஆயிரம் பேர் பங்குபற்றினர்

ஜெனிவா,ஏப்.7

ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஜெனிவா நகரில் திரண்ட சுமார் 12ஆயிரம் பேர் கொண்ட இலங்கைத் தமிழர் பேரணி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜெனிவா, மத்திய ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டது. புலிகளின் அரசியல் ஆலோசகர் வி.உருத்திரகுமாரன் நிகழ்த்திய உரையை அடுத்து பேரணி ஆரம்பமாகியது.

பேரணியில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகின்றது.


நாதஸ்வரம், மேள வாத்தியங்கள் முழங்க தலைவர் பிரபாகரனின் படங்களுடனும் தேசியக் கொடிகளுடனுமம ஊர்வலம் புறப்பட்டது. தமிழீழப் பெண்கள் அணி, கல்விப் பிரிவினர், 'பொங்குதமிழ்' ஏற்பாட்டாளர்கள் மற்றும் தமிழீழ மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள் ஊர்வலத்தில் சென்றனர்.


ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும், ரோம், ஒஸ்லோ, கோப்பன் ஹெகன், ஸ்ரொக்கோலம், பேர்லின், ஆம்ஸ்டர்டம், பிரஸல்ஸ் மற்றும் பாரிஸ் ஆகிய தூர இடங்களிலிருந்தும் புலம்பெயர்ந்த மக்கள் வந்து பெருந்திரளாகக் கலந்துகொண்டனர் என்று ஏற்பாட்டாளர்கள் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக அமுலிலிருந்து வந்துள்ள அமைதிக்கு எதிராகப் பிரசாரம் செய்துவந்த சக்திகள் மீண்டும் பயங்கர ரூபத்தில் தலையெடுத்திருப்பதை நடந்து முடிந்த தேர்தல் காட்டியுள்ளது. தங்களுக்கு மட்டுமே அமைதியும் அபிவிருத்தியும தேவையென்பதை வெளிக்காட்டும் விதத்தில் மீண்டும் சிங்கள பௌத்த தேசியத்தை பதவிக்குக் கொண்டுவநதிருக்கிறார்கள். எனவே, எதிர்காலம் குறித்து நாம் உண்மையாகவே கவலை கொண்டுள்ளோம். ஆகவே, தமிழ் மக்கள் அளித்துள்ள தீர்ப்புக்கு மதிப்பளித்து உண்மையான அமைதியையும் தீர்வையும் உருவாக்கும்படி இலங்கை அரசை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வலி யுறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொங்குதமிழ்' பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் ஜெனிவா, வார்ஷச்ஷயர் ஹோட்டலில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. வண.எஸ்.ஜே. இமானுவல் தலைமை வகித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் பிரிவுத் தலைவர் ஈ.கௌசல்யன், கிழக்கின் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர் சிவஞானம் கரிகாலன், நியூயோர்க்கில் வதியும் சட்டநிபுணர் வி.உருத்திரகுமாரன், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிதம்பரநாதன், சுவிறஸர் லாந்து தமிழ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு செயலாளர் அன்ரன் பொன்ராஜ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

(ப)










## விகாரைக்கு வழிகாட்டும் பெயர்ப்பலகை எரிப்பு

தெல்லிப்பழை,ஏப்.7

சுன்னாகம் சந்திப்பகுதியில் கந்தரோடை இதுறுகொட விகாரையின் வழிகாட்டியாக அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகை நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதோரால் எரியூட்டி நாசமாக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் சந்திப்பகுதியில் கந்தரோடையில் படையினரால் நிறுவப்பட்ட பௌத்த விகாரைக்கு வழிகாட்டும் விதமாக இரு வாரங்களுக்கு முன்பு மும்மொழிகளிலுமான இந்தப் பெயர்ப்பலகை நடப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதோரால் இப்பெயர்ப்பலகை எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளது. அதேவேளை எரிக்கப்பட்ட இப்பெயர்ப் பலகைக்கு முன்பாக இராணுவ காவல் நிலையம் ஒன்றுள்ளமையும் அதில் படையினர் தொடர்ச்சியாகப் பாதுகாப்புப் பணிகளிலீடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-15)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.7

தீவகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் ஜி.சீ.ஈ. உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றுவருகிறது.

இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வணிகக் கல்விப் பாடத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறும். யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரத்தினம் கருத்துரை வழங்குவார்.

நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்து நாகரிகம், தமிழ், அரசியல் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும். திருமதி கிருஷ்ணவேணி றொபேட், ஈ.குமரன், எஸ்.சகாய சீலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவார்கள்.

(ம-8)

## தேர்தல் முடிந்த பின்னரும் வன்முறை தொடர்கின்றது

கொழும்பு,ஏப்.7

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பும் பல்வேறு தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நாடு முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் காலை 6மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 12முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைத் தடுப்புப் பொலீஸ் பிரிவுக்குக் கிடைத்துள்ளன.

இவற்றுள் கம்பஹா மாவட்டத்திலிருந்து 9முறைப்பாடுகளும், அம்பாறை மாவட்டத்திலிருந்து 2முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்தது முதல் இன்று வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் 1,491 ஆக அதிகரித்துள்ளது. அவற்றில் 1,179 முறைப்பாடுகள் குற்றவியல் சட்டத்தை மீறியவை என்றும் ஏனையவை தேர்தல் சட்டவிதிகளை மீறியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-ரி)

## சுண்டிக்குளத்தில் வாக்களிப்பு 95 வீதம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ். தேர்தல் மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் உள்ள சுண்டிக்குளம் வாக்களிப்பு நிலையத்தில் 95 வீத வாக்குப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

37 வாக்காளர்களைக் கொண்ட இவ்வாக்களிப்பு நிலையத்தில் 35 வாக்காளர்கள் வாக்களித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-173-182)



# அச்சுக்கலை

ஆரம்பம் முதல் இறுதி வரை
*(Printing A to Z)*

**ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் ஏற்றது**

உள்நாட்டிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ள தொழில் வெற்றிடங்களான Graphic Designers, Type Setters, Offset Machine Minders, Camera Operators, Plate Makers, Pasteup Artists, Screen Printers, Binders, Guilletine Operators, Flexographic Printers போன்ற துறைகளில் உடனடித் தொழில் வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தொழிற் பயிற்சி.

**இப்பயிற்சி அலகில் உள்ளடக்கப்படும் பயிற்சிகள்**

அச்சுக்கலை அறிமுகம், பத்திரிகை, புத்தகங்கள், பெட்டிகளுக்கான வடிவமைப்பு (Designing - *Manuel & Computer*) கமரா இயக்குதல், (Camera Operating, Negative & Positive Making, Two & Four Color Separations - *Manual & Computer)* பிளேட் வடிவமைப்பு (Planing) பிளேட் தயாரிப்பு (Plate Making) அச்சடித்தல் (Printing, 4, 8, 16 Pages, Two & Four Color Registration) லமினேட் செய்தல் (Industrial Laminating Hot & Cold), புத்தகம் கட்டுதல் (Binding, Collator Operating) வெட்டுதல், (Paper Cutting & Shaving, Dye Cutting, Embossing, Hot Stamping) ஸ்கிறீன் அச்சு (Screen Printing)

மற்றும் *Flexographic Printing, Gravio Printing, Pad Printing, Fabric Printing, Textile Printing* போன்றவற்றிற்கும் அறிமுகமும் தேவையான விளக்கங்களும் அளிக்கப்படும்.

**கலைக்குழல்**
அச்சுக்கலை பயிற்சிப் பாடசாலை

239. பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 222 5844


## குண்டும் குழியுமான வீதியால் அவதி

கரவெட்டி,ஏப்.7

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள வீதி குண்டும் குழியுமாக உள்ளது.

மேற்படி வீதி பாரிய சேதத்திற்கு உள்ளாகி இருப்பதால் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. மழைநீர் பள்ளங்களில் தேங்கி நிற்கின்றது. இதனால் பாதசாரிகள் பலர் அழுககு நீர் அபிஷேகத்திற்கும் உள்ளாகின்றனர்.

இவ்வீதி நிலை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்ததாகத் தெரியவில்லை என மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

(ம-70)


**இன்று ஆரம்பம்**

**A/L 2006**
3.30 p.m.

பொருளியல் -P.மோகன்
கணக்கீடு -S.S.சீலன்
வணிகக்கல்வி -S.சுஜன்

வர்த்தகக் கல்லூரி,
சங்கானை.
(30546)



# தேவை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்களால் புதிதாக அமைக்கப்பெற்ற பெண்கள் உணவு அறைக்கு உணவு பரிமாற (சப்ளை) பெண்கள் தேவை. ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும். பின்வரும் விலாசத்திற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் நேரில் சமுகம் தரவும்.

**மலாயன் கபே**
(30557)(19-12-18-16) 36, 38, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# இலங்கை வங்கி அறிவித்தல்

வங்கி அலுவல்களுக்காக இலங்கை வங்கியின் சகல கிளைகளும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை திறந்திருக்கும்.

அத்துடன், வங்கியின் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் 14.04.2004 புதன்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும் என்பதனையும் அன்பார்ந்த வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

உதவிப் பொது முகாமையாளர்,
உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.
(C/34098)(40-12-16-18)

# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கட்டடங்கள் திணைக்களம்

1) தலைவர் கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் வித்தியானந்தன் நூலகத்திற்கு 2ஆம் மாடிக்கு அலுமினிய பிறிவிடுதல் ஒன்றை அமைப்பதற்காக முடிய கேள்விப் பத்திரங்களை 21.04.2004 அன்று மு.ப. 10.00 மணிவரை பெற்றுக் கொள்வார்.

2) பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 16.04.2004 அன்று பி.ப. 3.30 மணிவரையிலான நேரத்தில் மீளப்பெறப்படமுடியாத கேள்விப் பத்திர கட்டணமாக ரூபா 1,000 மட்டும் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3) பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் கேள்விப் பத்திரங்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் உடன் சமுகமளித்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4) மேற்கூறப்பட்ட துறையில் அல்லது இதுபோன்ற வேலைகளில் கடந்த 5 வருட கால முன்னனுபவம் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திர ஆவணங்கள் விநியோகிக்கப்படுவதற்கு முன்னதாக ஆவண ரீதியான அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5) மூடிய கேள்விப்பத்திரங்கள் தலைவர், கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பலாம். அல்லது முடிவு திகதிக்கு முன்பாகக் கையளிக்கலாம்.

6) கேள்விப் பத்திர ஆவணங்கள் கட்டணங்கள் எதுவுமின்றிப் பரீட்சிக்கப்படுவதுடன், மேலதிக விவரங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

W.S.மொல்லிகொட,
*கட்டடங்கள் பிரதிப்பணிப்பாளர்,*
*கட்டடங்கள் திணைக்களம்,*
*'செத்திரிபாய' சிறிஜயவர்த்தனபுர கோட்டை, பத்தரமுல்ல.*
(C/34252) (22-12-18-16)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 25ஆம் நாள் (07.04.2004) புதன்கிழமை சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 10.30 மணிமுதல் 11.40 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,



திருநிறை செல்வன்
**பிரகலாதன் (பிரபா)**
அவர்களுக்கும்



திருநிறை செல்வி
**பிருந்தா**
அவர்களுக்கும்



இறைவன் திருவருள் துணைகொண்டு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி.க.சிவசுப்பிரமணியம்
இல.01.சபாபதி லேன்,
யாழ்ப்பாணம்.



திரு.திருமதி.சி.தங்கமயில்
கிராமக் கோட்டடி,
பருத்தித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு) (30570)(12-16-18)

# 31 ஆம் நாள் நீங்காத நினைவோடு

அன்னை மடியில்
10 – 07 – 1954



அம்பாள் அடியில்
08 – 03 – 2004

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட

## திருமதி வரதலெட்சுமி தணிகாசலம்

திதி:07.04.2004 புதன்கிழமை

எங்கள் அன்பின் திருவுருவே!
அணையா ஒளிவீசும் மணிவிளக்கே!
இறைபக்திக்கும் பாசத்திற்கும்
இலக்கணமாய் வாழ்ந்த ஆருயிர் அம்மாவே!
கணப்பொழுதில் பிரிந்திரே! எமைவிட்டுப்
பிரிந்த நிலையினை எண்ணமுடியவில்லையே!
என்ன நடந்ததென்று ஏங்கித் தவித்து
தேம்பியழும் விழிகளுங்கள் - உருவத்தைத்
தேடுகின்றனவே! அம்மா ஒரு மாதமல்ல
இதுபோல் பலநூறு மாதங்கள் சென்றாலும்
உந்தன் நினைவு எமைவிட்டு அகலாதம்மா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(30577)(12-16-18)

*இல.70, பலாலி றோட்,*
*திருநெல்வேலி.*

பிரிவின் துயரத்தோடு வாழும்:
குடும்பத்தினர்.


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6157504 முதல் 6161086 வரை
சீட்டிழுப்பு இல. 21 திகதி 05-04-2004

வெற்றி எண்கள் **0 2 3 7 5 9** சுப்பர் எண் **4**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,70,18,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,70,18,750/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 1,000,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 03 | 50,000/- | 150,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 32 | 5,000/- | 160,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 314 | 500/- | 157,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 3,134 | 50/- | 156,700/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 31,068 | 10/- | 310,680/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | - | 5,000/- | - |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 34 | 1,000/- | 34,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 312 | 100/- | 31,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 3,105 | 20/- | 62,100/- |
| மொத்தம் | 38,002 | | 10,61,680/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 10,61,680/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,71,05,925/-**

6160229-8-81
6158470-4-18
6160776-3-02
6158191-5-33
6160828-1-54

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.7

மட்டுவில் ஆநடராசாவின் 'திருநறை போற்றுந் தெய்வம்' நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5மணிக்கு அரச கணக் குகள் திணைக்களப்பணிப்பாளர் ஆ.வீர சிங்கம் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை சட்டத் தரணி திருமதி க.சொர்ணலிங்கமும், ஆய்வுரைகளை இந்து மன்றப் பொதுச செயலாளர் கந்தையா நீலகண்டன், இந்து கலாசார திணைக்களப் பணிப் பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

(ம-10)

## விஞ்ஞானச் சங்க வினா விடைப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.7

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத் தும் வினாவிடைப் போட்டி இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியால யம், யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல் லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந் துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றுகின்றனர்.

(ம-8)

## பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் பற்றி ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வலிகாமம்,தெற்கு,ஏப்.7

பாடசாலை மாணவர்களின் சுகா தாரம், சுகவாழ்வு என்பவற்றை மேம் படுத்தல் தொடர்பாக வலிகாமம் கல்வி வலய பிள்ளைநேய பாடசாலை ஆசிரி யர்களுக்கான இரண்டுநாள் செயல மர்வு ஒன்று இம்மாதம் 8,9 ஆம் திகதி களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த புன்னாலைக்கட்டுவன் அரசி னர் தமிழ்க் கலவன் பாடசாலை, அள வெட்டி வடக்கு அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, மானிப் பாய் விவேகானந்த வித்தியாசாலை, அராலி கிழக்கு அரசினர் தமிழ்க்கல வன் பாடசாலை, இளவாலை ஆண் கள் றோ.க.பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் இக்கருத்தரங் கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 29 - 12 - 1988



மறைவு 09 - 03 - 2004

### செல்வி சிவராசா நிறோஜினி

(யாழ்/விக்னேஸ்வராக்கல்லூரி, கரவெட்டி)

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லியடி,
கரவெட்டி. (30574)(37-11-17) உன்பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 13 - 01 - 1931



இறைவன் திருவடியில 08 - 03 - 2004

### திருமதி சிவபாக்கியம் கார்த்திகேசு

புங்குடுதீவு - 11

**அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழி பேசி பண்போடு வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து எமது துயரில் பங்கு கொண்டதுடன் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தும் அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும் பங்குகொண்ட மட்டுவில்வாழ் மக்களுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றோம். மற்றும் மலர் வளையங்கள், மலர்மாலை, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், செய்தித்தாள் மூலம் துயர்பகிர்ந்து, அஞ்சலிசெலுத்திய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டவர் களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

மேலும் இன்று (07.04.2004) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மட்டுவில் கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மட்டுவில் (30584)(37-11-17) பீட்டப்பிள்ளைகள்.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலான 1 ஸ்ரீ 1000 மொடல் மொறிஸ் மைனர் கார் விற்பனைகுண்டு.

தொடர்பு:-
அன்னம்ஸ்
இல. 114,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.-222-7115
(30591)

## வகுப்பு

ஆங்கிலம், சமூகக்கல்வி, புவியியல் (G.C.E.O/L, A/L) ஆகிய வகுப்புக்கள் குழுக்களாக நடை பெறுகின்றன. சேரவிரும்புவோர் தொடர்புகொள்க.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, தாவடி.
077-6103233
(30586) (40)

## நிறைஞ்சனாஸ்
சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக் கொடு என்னைத் தருவேன் (ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதே)
Maid in Manhattan
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
(C33770) (12)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரபு, ரம்பா நடித்த
பந்தா பரமசிவம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.தே.)
8 முதல் தம்
(C33519) (12)

## நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.ரஹ்மானின் இசையில்....



தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, (புதிய நேரம்)
(C-34180) (12)


## கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஆகிய

### திருமதி சங்கரப்பிள்ளை விசயலட்சுமி

அவர்கள் 05.04.2004 அன்று இறைபதமடைந்ததையிட்டு எமது சங்கத்தின் சார்பில் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீர்வேலி ஸ்ரீமுருகன்
மாதர் சிக்கன கடனுதவு
கூட்டுறவுச்சங்கம். (30558)(37-11-17) பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னவன் கணபதிப்பிள்ளை



கைதடி மேற்கைச் சேர்ந்த சின்னவன் கணபதிப் பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (05.04.2004) திங் கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் குண்டுமணியின் அன்புக் கணவரும் மாதுரிதேவி, சாந்தம், தம்பித்துரை (ஜேர்மனி), சின்னராசா, ஐயாத்துரை, தவமணி இராசம்மா, ராஜினி, விமலா (பிரான்ஸ்), ஜெயசலன் (பிரான்ஸ்), ஜெயராஜ (லண்டன்)ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ் சென்ற கனகு மற்றும் ஐயாத்துரை இராஜமோகனா (ஜேர்மனி), இந்துமதி, தெய்வமலர், குணரட்னம், வீரசிங்கம், சந்திரசேகரம (நீர்கொழும்பு), உதயகுமார் (பிரான்ஸ்), சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைதடி மேற்கில் இருக்கும் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு. (30590)(37-11-17) தகவல்: குடும்பத்தினர்.

### இராமநாதன் தியாகராஜா



(ஓய்வுபெற்ற பெற்றோலியக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட இராம நாதன் தியாகராஜா அவர்கள் 06.04.2004 செவ்வாய்க கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜயந்தி (கிழக்குப் பல்கலைக்கழகம்), சுகந்தி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), ஆகியோரின அன்புத்தந்தையும் ரமணீஸ்வரன்(கிழக்குப் பல்கலைக் கழகம்), சிவநேசன்(உஷா ஏஜென்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சௌந்தர்யா, அநிருத்தன், செந்தூரன். ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.04.2004) புதன்கிழமை பி.ப 3.00மணியளவில் 18,அம்மன் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

18,அம்மன் வீதி
கந்தர்மடம்,யாழ்ப்பாணம. (30589)(37-11-17) தகவல்: ந.சிவநேசன்(மருமகன்).

### நடராசா சண்முகலிங்கம்



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிறாம்பியடியை வசிப்பிடமாகவும் சம்பியன் லேன், மாத்தனை முருகன்கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சண்முக லிங்கம் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் கச்சேரி) அவர்கள் 06.04.2004இல் காலமாகி விட்டார்.

இவர் சித்திராவின் அன்புக் கணவரும் சந்திரிக்காவின் அன்புத் தந்தையாரும், நாகேஸ் வரனின் மாமனாரும் காலஞ்சென்ற கனகலிங்கம், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி செல்வராசா ஆகியோரின் சகோதரனும் ராஜினி, சாந்தி, குமுதினி, மாயசுதன், லங்காசுதன் ஆகியோரின் மைத்துனரும் பாலசுப்பிரமணியம்(புகையிரதத் திணைக்களம்), சிவராசா (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.வைத்தியசாலை), சிவனேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் சகலனும் சுதர்சன், சஜீவன் ஆகியோரின் மாமனாரும் கணேசு, சர்வலோகராஜா ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2004) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன்,
கொக்குவில் (30587)(37-11-17) தகவல் சித்திரா (மனைவி).

### திருமதி முருகேசு வள்ளியம்மை

வரணி, இயற்றாலை வரணியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி முருகேசு வள்ளியம்மை நேற்று (06.04.2004) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் -சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும காலஞ்சென்ற பண்டிதர் முருகேசுவின் அன்பு மனைவியும் திருமதி உமை யம்மா சிவபாதம் (U.S.A), ஆனந்தசிவம் (குளோபல் தொலைத் தொடர்பகம், கொடிகாமம்), Dr.கதிர்காமநாதன் (பொறியியலாளர், U.S.A), மயில்வாகனம் (பொறியியலாளர், U.S.A), காலஞ்சென்ற செல்வி சிவதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாதம் (U.S.A), பராசக்தி (ஆசிரியை, கொடிகாமம் திருஞாவுக்கரசு மகாவித்தியாலயம்), புஷ்பா (U.S.A), சாந்தி (U.S.A), ஞானாம்பிகை கனகலிங்கம் (விசுவமடு) ஆகியோரின் மாமியாரும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களான திருமதி பேரம்பலம் தங்கம்மா, ஆதுரைநாதன் சிவயோகம் ஆகியோரின் சகோதரியும், Dr.சிற்றம்பலம், காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் ரமேஸ் (கனடா), ராதிகா (ஆஸ்திரேலியா), ரமணன் (U.S.A), வித்தியா (U.S.A), ரூபினி (U.S.A), அபிராமி (U.S.A), சங்கீதா (U.S.A) ஆகியோரின பேர்த்தியும் நாகணன் (கனடா) அவர்களின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2004) புதன்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் குளோபல் தொலைத்தொடர்பு நிலைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P: 0777-724877
0777-729821 (30580)(37-11-17) தகவல் மு.ஆனந்தசிவம் (மகன்).

உ
சிவமயம்

## சிவாச்சாரிய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 26ஆம் நாள் (08.04.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் வரும் சுபவேளையில்

எமது செல்வன்
சிரஞ்சீவி
**செந்தில்நாதஐயர் சுகுமார சர்மா**

அவர்களுக்கு ஏழாலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஆச்சார்யாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (30548)(37-11-17) செந்தில்நாத ஐயர் புஷ்பகாந்தி அம்மா தம்பதிகள்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வான இருபது எம்.பிக்களும் நேற்று கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் ஒன்று கூடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக திருகோணமலை மாவட்ட எம்.பியான இரா.சம்பந்தனும் பிரதித் தலைவராக யாழ். மாவட்ட எம்.பியான மாவை சேனாதிராசாவும் கொறடாவாக வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதனும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவோர் சில தினங்களில் தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
(க-9-ரி)

## சு.கூட்டமைப்பு ஆட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் கூறியதாவது:-

முன்னைய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களை என்றுமே ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பியும் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துள்ளது. இவ்வாறானதொரு கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கு எமது கட்சி எவ்வாறு ஆதரவு வழங்க முடியும்?

சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்தால் சமாதானப் பேச்சுக்கள் எந்தளவுக்கு முன்னெடுக்கப்படும் என்பதைவிட, பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உறவு நீடிக்குமா என்பதே இப்போது அனைவரதும் கேள்வியாக உளளது - என்றார் அவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைத் தவிர வேறு ஏதாவது கட்சிகளுடன் இணைந்து செயற்படும் எண்ணம் உண்டா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு 'அவ்வாறு இணைந்து கொள்ளும் எண்ணம் எதுவும் இப்போது இல்லை' என்று கூறிய சந்திரசேகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொண்டு செயற்பட உத்தேசித்துள்ளோம் என்றார்.

வடக்கு - கிழக்கில் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட 22 பேரும் மலையகத் தமிழர்களின் பிரச்சினைக்காகவும் குரல் கொடுக்கவேண்டும். இது பற்றி நான் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்குக் கூறிய போது அவர் இதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

எதிர்காலத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுப்பார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சி தருவதாக உள்ளதுடன், இது ஓர் அரசியல் திருப்பம் ஆகும் - என்றார் அவர்.(ஒ-3-10-ரி)

## மகிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுச் சேவையாற்றியவர் அவர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 1970 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் பெலியத்தைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

தந்தையின் வழியில் அரசியலில் பிரவேசித்த பிரதமர் ராஜபக்ஷ 34 வருட அரசியல் அனுபவம் பெற்றவர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் தொழில் அமைச்சராகவும் மீன்பிடி, நீரியல் வள அமைச்சராகவும் செயற்பட்டவர். மிகவும் எளிமையான சுபாவமுடைய பிரதமர், சிறுபான்மை இனத்தவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (க)

## கொழும்பிலிருந்து செய்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தித்தார். விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் பிற்பகல் 5 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

மேல்மாகாண மக்கள் முன்னணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இருக்கக்கூடிய நல்லுறவை மேலும் உறுதிப்படுத்தும் முகமாக இன்றைய சந்திப்பு இடம்பெற்றது.

இந்தத் தேர்தல் முடிவுகள் தென்னிலங்கையில் உருவாகக்கூடிய அரசு, குறிப்பாக முன்னெடுக்கப்படவேண்டிய சமாதானப் பேச்சு போன்றவை குறித்துப் பேசினோம்.

அத்துடன், சில செய்திகளை நான் கொழும்பிலிருந்து கொண்டுவந்திருக்கிறேன். தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்களின் அந்தச் செய்திகளை இங்கு நான் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்திருந்தேன். அவர் அது தொடர்பான பதில்களையும் தெரிவித்திருக்கின்றார்.

இச்சந்திப்பின்மூலம் மேல்மாகாண மக்கள் முன்னணி உறுதியான முறையிலே அரசியல் ரீதியான எழுச்சிகரமான செயற்பாடுகளை முன்னெடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இம்முறை மிகவும் தீர்க்கமாகவும் தெளிவாகவும் தங்களது ஆதரவை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

அந்த ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெளிவான முறையிலே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அந்த வகையிலே, மேல்மாகாண மக்கள் முன்னணியினராகிய நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எமது ஆதரவை மீண்டும் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றோம். - என்றார் அவர்.
(ஒ-9-ரி)

## விமல், நந்தன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள் வரிசையில் விமல் வீரவன்ச, நந்தன குணதிலக, விஜித ஹேரத் போன்றோர் முதலிடத்தை வகிக்கின்றனர்.

ஜே.வி.பியின் 8 உறுப்பினர்கள் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் பதவியேற்கவுள்ளனர். இப்போது கசிந்துள்ள செய்திகளின்படி விவசாயக் காணி, நீர்பாசன அமைச்சராக அநுர திசாநாயக்காவும் -

பிரதியமைச்சராக விமல் ரத்நாயககாவும் -

கலாசார தேசிய பாரம்பரிய அமைசசராக, விஜித ஹேரத்தும் -

பிரதியமைச்சராக சமிந்த வித்தியாரட்னவும் -

கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சராக கே.பி.லால்காந்தவும் -

பிரதியமைச்சராக சுனில் ஹந்துன்ஹெத்தி -

கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சராக சந்திரசேன விஜேசிங்கவும் -

பிரதியமைச்சராக நிஹால் கலப்பத்தியும் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

அமைச்சுகளின் விவரம் இன்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.
(க)

ஈசன் கல்வி நிலையம்
இரசாயனவியல்
A/L2005
PAPER CLASS
அலகுரீதியான மீட்டல்
வினா, விடை வகுப்பு
திரு-சிவத்திரன (B.Sc).
MON, FRI. - 6.30a.m.
ஆரம்பம்-09-04-2004(FRI)
(30547)(17)

SUBRA(14)
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
O/L DAY CLASS
ஆரம்பித்து விட்டது.
★ சென்ற ஆண்டு 100% சித்தி
★ கடமை-கட்டுப்பாடு-கண்ணியம்
★ வாரத்தில் 5நாள்கள் 7-12மணி வரை வகுப்புகள்
இலவச மீட்டல் வகுப்புக்கள்
★ தூர இடத்து மாணவருக்கு விசேட ஒழுங்குகள்
★ இன்று நேற்று அல்ல என்றும் கல்வியின் முன்னோடி நிறுவனம
SUBRA
(c/34094)(17)

2004 இல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான
வழிகாட்டல் கருத்தரங்கு
இடம்:- யா/விக்னேஸ்வராக்கல்லூரி மண்டபம். காலம் - 11.04.2004 மு.ப. - 9.00 மணி
உயர்தரப் பரீட்சையின் புள்ளியிடல் பணிக்கு தலைமை வழங்கும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆலோசனை வழங்குவார்கள்.
இணைந்த கணிதம்
கலாநிதி சி.சிறிசற்குணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
கணித - புள்ளிவிபரவியல்துறை
பௌதிகவியல்
கலாநிதி சி.சிவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல்துறை
இரசாயனவியல்
கலாநிதி இ.சிறிகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இரசாயனவியல்துறை
உயிரியல்
திரு-சி.நோபின் சுரேந்திரன்
விரிவுரையாளர்
விலங்கியல்துறை
கலாநிதி ந.சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல்துறை
திரு-ந-குகநாதன்
விரிவுரையாளர்
இரசாயனவியல்துறை
திரு-இ.கபிலன்
விரிவுரையாளர்
தாவரவியல்துறை
(30572)(37)
ஏற்பாட்டாளர் ஸ்பேர்ஸ் விளையாட்டுக்கழகம்

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெறுவோர்"
விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.
A/L 2006 கலை, வர்த்தகம்
பிரிவு 2 ஆரம்பம் 10.04.2004 (8 மணி)
Acc. - பாலவாசன், Eco. - உதயன்
Com. - யசோ
Log. - சயந்தன் Tam. - குழந்தை பிரிவு (I)
Dra. - மதி - லிங்கம் பிரிவு (II)
Geo. - பாபு Hic. - பத்மராஜா
Hin. - தரன் His. - சுதன், பத்மன்
P.S. - ஸ்ரீரங்கநாத் Chri. - வசந்தன் (30510)(37)

CHEMISTRY CENTRE
Temple Rd., நல்லூர்.
A/L 2005
INORGANIC
Tue., Fri. 3 - 4 p.m.
A/L 2006
GENERAL
Mon.,Fri. 5.30 - 6.30 p.m.
By: அன்பழகன்
(C/34257)(38)

சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L 2006
கலை,வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்: 11.04.2004
(30560)

IIS
விசேட மாலை நேர வகுப்புகள்
ஆசிரியர்கள், தொழில்புரிபவர்களுக்கான விசேட மாலை நேரக கணனி வகுப்புகள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
இயக்குநர்,
IIS
யாழ்ப்பாணம்.
(C/34090)(40)

இடநெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ள
O/L DAYCLASS
பிரிவு 3 (8.30-2.00)
இன்று ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
(30553) 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

ஆசிரியர், மாணவர்களுக்கான விடுமுறைக்கால கணனிப் பயிற்சிநெறி ஆரம்பம்:-07,10.04.2004
Visualized funda's - School Level - (10 to 18 Years) Rs. 1250/=
Microsoft Office XP 3 Months Rs. 1750/=
SCC's QUICKHARD- a Hardware Management Program 2-3Weeks Rs. 750/=
Certificate In Accounting Package 4 Months Rs. 2750/=
Certificate In AutoCAD 3 Months Rs. 2750/=
Diploma In Internet cum Email Technology and Web Designing Rs. 3750/=
உங்கள் அனுமதியை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
Soft View Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P : 2225170
scclanka@hotmail.com

## மரண அறிவித்தல்

திருமதி
**சின்னத்துரை இலட்சுமி**

வீரப்திராயன், கரணவாய்தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை இலட்சுமி 06.04.2004 அன்று காலமானார்.

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருமதி சிவப்பிரகாசம பொன்னம்மாவின் சகோதரியும், தவமணி வீரகத்திப்பிள்ளை(சட்டத்தரணி), சிவநாதன்(முகாமையாளர், இலங்கை வங்கி,நெல்லியடி), நவமணி, சிவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராமநாதன், ஞானதேவி, சாந்தநாயகி, நாகேந்திரம், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் கரணவாய் தெற்கு, வீரப்பதிராயனில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றுபூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சிவநாதன்(மகன்)
முகாமையாளர் இலங்கை வங்கி,
நெல்லியடி.

கரணவாய்தெற்கு,
கரவெட்டி. (34256)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பி... ...ரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கல்வி, கலாசாரம், விளையாட்டுத்துறை ஆகியவற்றை சரியாகப் பின்பற்றினால் கலாசார சீரழிவு ஏற்படாது

## வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் உரை

வலி. மேற்கு,ஏப்.7

கல்வி, கலாசாரம், விளையாட்டுத்துறை சரியானமுறையில் பின்பற்றப்படுமாயின் கலாசார சீரழிவுகளை முழுமையாக எமது பிரதேசங்களில் இருந்து அகற்றமுடியும்.

- இவ்வாறு வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எமது மக்களின் முக்கியமான துறைகள் கல்வியும், கலாசாரமும், விளையாட்டும் ஆகும். இன்று இத்துறைகளில் எதிர்காலச் சந்ததியினரின் நாட்டம் மிகக் குறைந்து வருகின்றது. முன்னைய காலத்தில் இந்த மூன்று துறைகளும் எமது முன்னோர்களினால் கட்டிக்காக்கப்பட்ட ஒரு விழுமியமாக இருந்தது. தற்போதைய சூழ்நிலையில் இவற்றை நாம் கட்டிக்காக்க வேண்டிய நடவடிக்கைகளை கிராம, பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளவேண்டியது அவசியம் ஆகும்.

பாடசாலை மட்டத்திலும், கிராம மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் கலாசாரத்தையும், விளையாட்டுத் துறையையும் வளர்க்கவேண்டும். இதன்மூலம் எமது சமூகம் விழிப்படையும். சமூகம் விழிப்படைவதன் மூலம் கலாசாரச் சீர்கேடுகள் எமது பிரதேசத்தில் இருந்து நிச்சயமாக மறைந்துபோகும். எமது பிரதேசத்துக்குக் கலாசார விழுமியம் அதிகம் உண்டு. மேலும் இதனை நாம் நன்கு திட்டமிட்டு வளர்க்கவேண்டும். இதற்குப் பொதுமக்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கவேண்டும். இளைஞர், யுவதிகள் இன்று தொலைக்காட்சிக்கு முன்பாக அதிகநேரத்தைச் செலவழிக்கின்றனர். இதனை நாம் கட்டுப்படுத்துவதற்கு இளைஞர், யுவதிகளின் நாட்டத்தைக் கலாசார நிகழ்ச்சிகளுககு உட்படுத்தவேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அரும் பொருள்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது அவசியம் ஆகும்.

எமது பிரதேசத்திலுள்ள அரும் பொருள்களையும் பேணிப்பாதுகாப்பதற்கு கலாசாரப் பேரவையினர் முனனின்று செயற்படவேண்டும் - என்றார்.

இக்கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஏப்ரல் மாத இறுதியில் சங்கானையில் கலை விழா ஒன்றை நடத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-8-175)

## பொதுத்தேர்தலின் போது
# கடமைகளை முறையாக நிறைவேற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்களுக்குப் பாராட்டு

கொழும்பு,ஏப்.7

தேர்தல் நடவடிக்கைகளின்போது தமது கடமைகளை முறையாக நிறைவேற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கப் பொலீஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உயர் அதிகாரிகள் முதல் சகல மட்டத்திலுமுள்ள பொலீஸ் உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்படவுள்ளதாகப் பொலீஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதோடு, பணப்பரிசுகளும வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேட்புமனுத்தாக்கல் செய்தது முதல் பொதுத் தேர்தல் முடியும் வரை தங்கள் கடமையை முறையாக நிறைவேற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்கள் இந்தத் திட்டத்தின் மூலம பயன்பெறுவர். தேர்தல் கடமையில் அசட்டையாக இருந்த பொலீஸ் உத தியோகத்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் சமயத்தில் கடமையை முறையாக நிறைவேற்றாத பொலீஸ் உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார். (ம-ரி)

# ஆலயத்தில் குழந்தையிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரி,ஏப்.7

பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பங்குனித்திங்கள் உற்சவத்தின்போது குழந்தை ஒன்றிடமிருந்து தங்கச் சங்கிலி அபகரிக்கப் பட்டது.

ஆலயத்தில் பெண்மணி ஒருவர் தனது குழந்தையை அருகில் நின்ற இளைஞர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு சுவாமியை வணங்கினார் என்றும் -

தனது வழிபாட்டை முடித்துவிட்டு அந்த இளைஞரிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்ட பெண்மணி குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலி காணாமற்போயிருந்ததை அவதானித்தார் என்றும் -

ஆனால், அதற்குள் இளைஞர் மாயமாகிவிட்டார் என்றும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக அங்கு பணியில் நின்ற பொலீஸாரிடம் முறையிடப்பட்டது. பொலீஸார் இத்திருட்டுத் தொடர்பாக எவரையும் கைது செய்யவில்லை.

இதேவேளை, ஆலயங்கள் உட்பட மக்கள் அதிகமாகவுள்ள இடங்களுக்குச் செல்வோர் தமது பிள்ளைகளுக்கு நகைகளை அணிவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சாவகச்சேரிப் பொலீஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். அது மட்டுமலலாமல் முன்னர் பழக்கமில்லாத இளைஞர்கள், யுவதிகளிடம் பிள்ளைகளை ஒப்படைக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர். (ஒ-31)


# பணிநிலை வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான தனியார் கணனி நேரச்சு (Offset) நிறுவனத்திற்கு கீழ் காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. திரைஅச்சுப்பதிப்பாளர் (Screen Printer)** (பெண்கள்)

தகைமை: திரையச்சுப் பதிப்பு தொடர்பான கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது திரையச்சுப் பதிப்பு தொடர்பான முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் 3000 - 4500 + 1500 / 3 X 3500

**02. நேரச்சு எந்திரி இயக்குனர் (Offset Machine Minder)**

வகை: • *DAVIDSON 701D* • *SOLANA 124*

தகைமை: நேரச்சு (Offset) இயக்குவதில் ஓராண்டு முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் 4500 - 6000 + 1500 / 3 X 3500

**02. பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security Guard )**

தகைமை: வயதெல்லை 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும், உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் 3750 + வாழ்க்கைபடி

விண்ணப்ப முடிவுத்திகதி 09.04.2004

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
மேற்பாத்து இல: 2186
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: நீங்கள் தெரிவு செய்யும் பதவியினை காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.


# கிழக்குத் தமிழ் எம்.பிக்கள் எவருமே சு.கூட்டமைப்பை ஆதரிக்கமாட்டார்கள்

மட்டக்களப்பு, திகாமடுல்ல தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசில் அங்கம் வகிக்கமாட்டார்கள். அப்படி சந்திரிகாவின் அரசுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று வெளியான செய்திகள் தவறானவை.

- இப்படி தகவல் வெளியிட்டிருக்கிறார் மட்டக்களப்பைச் சேர்ந்த அரசியல், இராணுவ விமர்சகரான சிவராம் (தராகி). இதுதொடர்பாக அவர் பி.பி.ஸி. 'தமிழோசைக்கு' தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பில் நிலைவரங்களை அவதானித்து வருகிறேன்.

கருணா அணியில் இருக்கின்ற அரசியல் பொறுப்பாளர் விசுவுடன் நான் இதுபற்றிப் பேசியிருந்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் - இந்தப் பிரச்சினை ஏற்படும் வரை - தமது பிரசாரத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

அதற்கு முற்றும் முரணான கோட்பாடுகளைக் கொண்ட - ஜே.வி.பி. போன்ற கட்சிகளை உள்ளடக்கிய - சந்திரிகா அரசில் அங்கம் வகிப்பதற்கு யாரும் அங்கு தயாராகவில்லை என்று அறியமுடிந்தது.

அந்தவகையில், அரச ஊடகங்கள் கருணாவிற்கு ஆதரவான ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்திரிகா அரசுக்கு ஆதரவு தெரிவிக்கப் போகிறார்கள் என்று கூறுவது தவறான தகவல் என்று உறுதியாகக் கூறலாம் - என்றார் சிவராம்.

இதற்கிடையில் - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை கருணா குழுவினர் நேற்றுமுன்தினம் அழைத்துப் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து எம்.பிக்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜெயானந்தமூர்த்தியைத் தவிர ஏனைய நால்வரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெயானந்தமூர்த்தி இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளாமல் கொழும்புக்கு வந்துவிட்டார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ)

## புகையிலைச்செடி அறுவடை ஆரம்பம்

கோப்பாய்,ஏப்.7

கோப்பாய் நீர்வேலிப் பகுதிகளில் செய்கைபண்ணப்பட்ட புகையிலைச் செடிகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் -

இம்முறை புகையிலைக்கு நல்ல சந்தை வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, கடந்த வருடம் புகையிலைச் செடிகளை ஒருவகை இலைச்சுருள் நோய் தாக்கி பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருந்ததால், இம்முறை விவசாயிகள் புகையிலைச் செய்கையில் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை என்றும் கூறப்பட்டது.

ஆனால், கடந்த வருடத்தைப் போல் இம்முறை புகையிலைச் செடிகளில் அவ்வளவாக நோய்த் தாக்கம் ஏற்படவில்லை என விவசாயிகள தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

# கோவாச் செய்கையாளருக்கு இம்முறை பெரும் ஏமாற்றம்

கோப்பாய்,ஏப்.7

யாழ். குடாநாட்டில் கோவாச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குடாநாட்டுச் சந்தைகளில் ஒருகிலோ கோவா ரூ.3 முதல் ரூ.5 வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது குறித்து விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த வருடம் இங்கிருந்து தென்னிலங்கைக்கு மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், இம்முறை இது குறித்துப் போதிய ஆர்வம் செலுத்தப்படவில்லை.

இதனால் விவசாயிகளின் எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது - என்றார் அவர். (எ-72)

# நெடுந்தீவுக் கடலில் உயிரிழந்த தமிழக மீனவரின் சடலம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த மூன்றாம் திகதி இலங்கைக் கடற்படைப் படகும், இந்திய மீன் பிடிப் படகும் மோதிக்கொண்ட விபத்தில் மரணமான இந்திய மீனவரின் சடலம் அவரது உறவினரிடம் கையளிக் கப்பட்டது.

இந்த விபத்தில் தமிழ்நாடு, சேர் தூரைச் சேர்ந்த வேலாயுதம் வெற்றிவேல் (வயது16) என்ற இளைஞனே மரணமானவராவார். இவருடன் மீன் பிடித் தொழிலுக்காக உடன்வந்தவரும் விபத்தின்போது கடலில் பாய்ந்து நீந்தி உயிர்தப்பிய இருவரில் ஒருவருமான பழனியாண்டி பாலசுப்பிரமணியம் என்பவரே சடலத்தைப் பொறுப்பேற்றார்.

மரண விசாரணையை மேற்கொண்ட ஊர்காவற்துறை நீதிவான் எம்.பிறேம்சங்கரின் உத்தரவின் பேரில் சடலம் கையளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நண்பகல் கையளிக்கப்பட்ட சடலம் கடற்படையினரின் வாகனம் மூலம் பலாலி இராணுவ முகாமிற்கு எடுத்துச்செல்லப் பட்டது. பலாலி இராணுவ வைத்திய சாலைப் பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்படும் இச்சடலம் இந்தியப் படையினரின் துணையுடன் இந்தியாவிலுள்ள இறந்தவரின் பெற்றோரிடம் கையளிக்கப்படும் எனவும் -

இதுபற்றி இந்தியக் கடற்படையினருடன் தொடர்புகொள்ளப்படவிருப்பதாகவும் - சடலத்தைப் பொறுப்பேற்றுக் கொடுக்கவந்த ஊர்காவற்துறைப் பொலீஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஓ-15)

# சாதாரணதர பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம்,ஏப்.7

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது மீளாய்வு விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களூடாக அனுப்பி வைக்க வேண்டுமெனவும் -

ஒரு பாடம் மீளாய்வு செய்வதற்கு நூறு ரூபா கட்டணம் செலுத்தப்பட வேண்டுமெனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-152)

## ஆதரவுக்கு நன்றி கூறுகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஏப்.7

கடந்த பொதுத் தேர்தலில் தமது கட்சிக்கு ஆதரவளித்த அனைவருக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பொதுத் தேர்தலில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்தது முதல் பல வகையான அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் என்பனவற்றை நாம் எதிர்கொண்டிருந்தோம். இதனால் சுதந்திரமான முறையில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க முடியாமல் இருந்தது. பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் எமது பிரசாரப் பணிகளை முன்னெடுத்தோம்.

இத்தனைக்கும் மத்தியிலும் துணிவுடன் முன்வந்து எமக்கு வாக்களித்தவர்களுக்கும் ஆதரவளித்தவர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ம-8)

## வீதி புனரமைப்பு

கோப்பாய்,ஏப்.7

யாழ் - பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திப்பகுதியில் கடந்த பல மாதங்களாகப் போக்குவரத்திற்குப் பெரும் இடையூறு விளைவித்து வந்த பாரிய குழிகள் தற்போது செபபனிடப்பட்டுள்ளன.

இவற்றைச் சீரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே. (எ-72)

# ஆலய பூங்காவன உற்சவம் பொலீஸ் பாதுகாப்புடன்!

நல்லூர் சட்டநாதர் சிவன்கோவிலில் நேற்றுமுன்தினம் பூங்காவன உற்சவம் பொலீஸ் பாதுகாப்புடன் நடத்தப்பட்டது.

வருடாந்த மஹோற்சவத்தின் இறுதித் திருவிழாவான பூங்காவனம் உற்சவத்தன்று இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்துவது தொடர்பாக ஆலய பரிபாலன சபைக்கும் ஆலயத்தின் இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. கருத்து வேறுபாடு பின்னர் பெரும் பிணக்காக மாறி மோதல் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகியதையடுத்தே ஆலயத்துக்கு காவல்போட பரிபாலனசபை தீர்மானித்ததாகத் தெரிகிறது. இதனையடுத்துக் கோப்பாய் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் அங்கு கடமையில் நிறுத்தப்பட்டனர்.

வழமையான பூங்காவனம் உற்சவத்தை நடத்திவந்த ஆலய இந்து இளைஞர்மன்ற இளைஞர்கள் இரவுத் திருவிழாவில் போது வழமை போல இசை நிகழ்ச்சியை நடத்த அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்துத் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

ஆலய உற்சவம் பொலீஸ் காவலுடன் நடத்தப்பட்டிருப்பது குறித்து அடியார்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ-180)

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## பதுளை மாவட்டம்

| கட்சி | மஹியங்கனை | ஹாலி-எல | ஹப்புத்தளை | வியலுவ | ஊவா பரணகம | பண்டாரவெல | பசறை | வெலிமட | பதுளை | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 27727 | 17926 | 15499 | 14805 | 19946 | 21744 | 13779 | 23040 | 15103 | 9025 |
| ஐ.தே.மு. | 23822 | 19125 | 21258 | 12874 | 18030 | 23793 | 21016 | 20441 | 15825 | 5523 |
| ஐக்கிய லலித் முன்னணி | 89 | 81 | 73 | 55 | 67 | 73 | 94 | 67 | 45 | 03 |
| ஐக்கிய சோஷலிச கட்சி | 76 | 66 | 92 | 50 | 52 | 79 | 77 | 53 | 43 | - |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 47 | 64 | 45 | 33 | 62 | 158 | 79 | 67 | 45 | 10 |
| ஜாதிக ஹெல உறுமய | 363 | 725 | 639 | 211 | 557 | 1343 | 279 | 775 | 1586 | 654 |
| புதிய இடதுசாரி முன்னணி | 27 | 13 | 26 | 03 | 113 | 19 | 12 | 08 | 18 | 09 |
| றுகுணு மக்கள் கட்சி | 03 | 03 | 01 | 05 | 06 | 05 | 03 | 03 | - | 03 |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 03 | 05 | 04 | 02 | 02 | 05 | 01 | 03 | - | - |
| சுவராஜ்ய கட்சி | 08 | 01 | 04 | 08 | 03 | 03 | 02 | 03 | 04 | - |
| பூமிபுத்திர கட்சி | 16 | 06 | 01 | 09 | 02 | 06 | 04 | 06 | 01 | 04 |
| சுயேச்சைக் குழு 1 | 04 | 08 | 03 | 07 | 03 | 04 | 05 | 03 | 07 | 01 |
| சுயேச்சைக் குழு 2 | 06 | 02 | 06 | 05 | 03 | 02 | 03 | - | 09 | - |
| சுயேச்சைக் குழு 3 | 06 | 06 | 03 | 03 | 01 | 01 | 01 | 02 | 04 | 03 |
| சுயேச்சைக் குழு 4 | 09 | 11 | 02 | 04 | 01 | 02 | 04 | 05 | 04 | 01 |
| சுயேச்சைக் குழு 5 | 09 | 05 | 04 | 07 | 01 | 05 | 04 | 02 | - | - |
| சுயேச்சைக் குழு 6 | 18 | 17 | 14 | 16 | 20 | 24 | 11 | 12 | 09 | - |
| சுயேச்சைக் குழு 7 | 58 | 36 | 34 | 51 | 30 | 44 | 23 | 32 | 21 | - |

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 1,78,634 - 3**
**ஐக்கிய தேசிய முன்னணி - 1,81,705 - 5**

## மொனராகலை மாவட்டம்

| கட்சி | பிபிலை | மொனராகலை | வெல்லவாய | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|
| ஐ.ம. சுதந்திர முன்னணி | 27149 | 34503 | 51137 | 4667 |
| ஐ.தே.மு. | 17851 | 21593 | 29102 | 2521 |
| ஐக்கிய லலித் முன்னணி | 82 | 78 | 112 | 03 |
| ஐக்கிய சோஷலிச கட்சி | 41 | 42 | 50 | 02 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 35 | 54 | 68 | 01 |
| ஜாதிக ஹெல உறுமய | 293 | 586 | 1618 | 178 |
| றுகுணு மக்கள் கட்சி | 02 | 05 | 03 | 02 |
| இலங்கை முற்போக்கு முன்னணி | - | 02 | 02 | 02 |
| இலங்கை தேசிய முன்னணி | 02 | 10 | 04 | 03 |
| சுவராஜ்ய கட்சி | 04 | 04 | 03 | - |
| பூமி புத்திர கட்சி | 03 | 07 | 08 | 01 |
| புதிய இடதுசாரி முன்னணி | 13 | 26 | 34 | 03 |
| சுயேச்சைக் குழு 1 | 03 | 05 | 08 | 01 |
| சுயேச்சைக் குழு 2 | 05 | 04 | 09 | - |
| சுயேச்சைக் குழு 3 | 04 | 03 | 04 | - |
| சுயேச்சைக் குழு 4 | 04 | 10 | 01 | - |
| சுயேச்சைக் குழு 5 | 05 | 07 | 04 | 01 |
| சுயேச்சைக் குழு 6 | 09 | 14 | 16 | - |
| சுயேச்சைக் குழு 7 | 22 | 43 | 42 | - |

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 1,17,456 - 3**
**ஐக்கிய தேசிய முன்னணி - 71,067 - 2**

## காலி மாவட்டம்

| கட்சி | பலப்பிட்டிய | அம்பலாங்கொடை | கரந்தெனிய | எல்பிட்டிய | ஹினிதும | வத்தேகம | ரத்கம | காலி | அக்மீமன | ஹபராதுவ | தபால் மூலம் வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய ம.சு.முன்னணி | 18002 | 26435 | 29807 | 34840 | 36633 | 35936 | 29413 | 20779 | 30897 | 30648 | 10995 |
| ஐ.தே.மு. | 14117 | 17289 | 14377 | 222243 | 27440 | 24572 | 19408 | 23585 | 21249 | 19417 | 5702 |
| சோஷலியக் கட்சி | 30 | 25 | 25 | 49 | 67 | 58 | 44 | 56 | 54 | 42 | 06 |
| தேசிய அ. முன்னணி | 40 | 80 | 37 | 83 | 50 | 77 | 53 | 85 | 64 | 48 | 09 |
| ஜாதிக ஹெல உறுமய | 1944 | 2544 | 1187 | 2411 | 1119 | 1368 | 2267 | 4166 | 3095 | 1667 | 1058 |
| புதிய இடதுசாரி முன்னணி | 11 | 99 | 24 | 16 | 15 | 42 | 38 | 110 | 49 | 30 | 23 |
| றுகுணு மக்கள் கட்சி | 08 | 07 | 03 | 02 | 02 | 06 | 03 | 01 | 03 | 03 | - |
| இலங்கை தேசிய முன்னணி | - | 06 | 06 | 01 | 02 | 03 | - | - | - | 01 | 02 |
| முற்போக்கு முன்னணி | 02 | 03 | 01 | - | 01 | 03 | 01 | - | 01 | 01 | - |
| சுவராட்ய கட்சி | - | - | 02 | 03 | 02 | 04 | 01 | 04 | 06 | 02 | 04 |
| பூமிபுத்திர கட்சி | 02 | 11 | 06 | 04 | 09 | 08 | 17 | 03 | 09 | 03 | 03 |
| ஐக்கிய லலித் முன்னணி | 37 | 45 | 46 | 45 | 82 | 213 | 49 | 60 | 42 | 51 | 04 |
| சுயேச்சை குழு 1 | 07 | 14 | 09 | 12 | 10 | 05 | 21 | 05 | 16 | 02 | - |
| சுயேச்சை குழு 2 | - | 02 | 03 | 01 | 02 | 03 | 02 | - | 04 | 02 | - |
| சுயேச்சை குழு 3 | 03 | 02 | 01 | 02 | 03 | 11 | 04 | 05 | 05 | 02 | 01 |
| சுயேச்சை குழு 4 | - | - | 01 | 02 | 02 | - | 05 | 01 | 01 | - | 02 |
| சுயேச்சை குழு 5 | - | 04 | - | 04 | 03 | 09 | 03 | - | 05 | 04 | - |
| சுயேச்சை குழு 6 | - | - | 03 | 05 | 05 | 05 | 06 | 01 | - | - | - |
| சுயேச்சை குழு 7 | 03 | 01 | 03 | 05 | 04 | 07 | 03 | 02 | 03 | - | - |
| சுயேச்சை குழு 8 | 01 | 05 | 14 | 05 | 03 | 11 | 04 | 05 | 07 | 08 | 01 |
| சுயேச்சை குழு 9 | 10 | 13 | 12 | 18 | 24 | 28 | 13 | 11 | 16 | 19 | - |

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 3,06,385 - 6**
**ஐக்கிய தேசிய முன்னணி - 2,09,399 - 4**

## வன்னி மாவட்டம்

| கட்சி | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 25631 | 35012 | 27667 | 1942 |
| ஈ.பி.டி.பி. | 476 | 488 | 68 | 52 |
| ஐ.ம.முன்னணி | 179 | 4713 | 391 | 1132 |
| பூமி புத்திர கட்சி | 17 | 37 | 02 | 01 |
| ஐ.தே.மு. | 4413 | 10724 | 271 | 799 |
| சோஷலிச கட்சி | 92 | 158 | 07 | 01 |
| ஹெல உறுமய | 02 | 58 | 03 | 10 |
| றுகுணு மக்கள் கட்சி | 04 | 01 | 0 | 0 |
| ஐ.ம.வி.மு. | 945 | 4908 | 71 | 104 |
| இடதுசாரி முன்னணி | 06 | 44 | 04 | 03 |
| சுயேச்சைக் குழு 1 | 07 | 13 | 04 | 0 |
| சுயேச்சைக் குழு 2 | 02 | 09 | 05 | 0 |
| சுயேச்சைக் குழு 3 | 22 | 22 | 03 | 0 |
| சுயேச்சைக் குழு 4 | 02 | 05 | 0 | 0 |
| சுயேச்சைக் குழு 5 | 0 | 57 | 0 | 0 |
| சுயேச்சைக் குழு 6 | 04 | 10 | 04 | 0 |
| சுயேச்சைக் குழு 7 | 02 | 02 | 0 | 0 |
| சுயேச்சைக் குழு 8 | 03 | 12 | 01 | 0 |
| சுயேச்சைக் குழு 9 | 43 | 113 | 60 | 01 |

**இ.தமிழரசுக் கட்சி - 90, 835 - 5**
**ஐ.தே.க. - 33,621 - 1**

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## கண்டி மாவட்டம்

| கட்சி | கலகெதர | உடுநுவர | குண்டசாலை | ஹரிஸ்பத்துவ | கம்பளை | ஹேவாஹெட்ட | பாததும்பறை | நாவலப்பிட்டி | செங்கடகலை | உடதும்பறை | யட்டிநுவர | மகா நுவர | தெல் தெனிய | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 15896 | 21739 | 23918 | 37806 | 22068 | 16277 | 16071 | 22708 | 17403 | 18319 | 22887 | 7141 | 13321 | 1257 |
| ஐ.தே.க | 16645 | 23413 | 24807 | 46572 | 30109 | 22724 | 26230 | 25823 | 22435 | 15285 | 22677 | 14376 | 13380 | 9422 |
| முஸ்லிம் கூட்டமைப்பு | 30 | 41 | 40 | 93 | 68 | 39 | 45 | 55 | 26 | 26 | 38 | 12 | 28 | 07 |
| லலித் முன்னணி | 03 | 11 | 14 | 20 | 16 | 14 | 12 | 14 | 10 | 07 | 14 | 03 | 07 | 02 |
| சோசலிச முன்னணி | 19 | 25 | 20 | 56 | 30 | 28 | 33 | 35 | 11 | 15 | 18 | 15 | 14 | 05 |
| தே.அ.முன்னணி | 43 | 134 | 112 | 183 | 63 | 77 | 75 | 61 | 27 | 20 | 96 | 70 | 27 | 21 |
| ஹெல உறுமய | 1513 | 3678 | 3896 | 7079 | 2515 | 1253 | 2946 | 1793 | 6191 | 307 | 4376 | 3959 | 674 | 2012 |
| ருகுணு கட்சி | | 03 | 02 | 01 | 02 | 05 | 01 | 03 | 01 | 03 | 0 | 0 | 03 | 0 |
| தேசிய முன்னணி | 03 | 05 | 0 | 0 | 04 | | 05 | 06 | 01 | 01 | 04 | 0 | 05 | 01 |
| முற்போக்கு முன்னணி | 0 | 03 | 0 | 06 | 01 | 02 | 01 | 03 | 01 | 0 | 01 | 0 | 0 | 0 |
| முஸ்லிம் கட்சி | 04 | 08 | 01 | 20 | 03 | 0 | 02 | 06 | 04 | 01 | 0 | 03 | 01 | 0 |
| ஸ்வராஜ்ஜிய | 28 | 02 | 04 | 25 | 03 | 02 | 10 | 02 | 13 | 03 | 05 | 05 | 01 | 0 |
| பூமி புத்ர | 03 | 04 | 03 | 10 | 06 | 07 | 07 | 02 | 11 | 02 | 20 | 02 | 0 | 04 |
| இடது சாரி முன்னணி | 11 | 34 | 28 | 84 | 04 | 22 | 31 | 44 | 61 | 12 | 51 | 59 | 09 | 21 |
| சுயேச்சை 1 | 03 | 04 | 01 | 04 | 02 | 03 | 07 | 02 | 03 | 01 | 01 | 02 | 0 | 04 |
| சுயேச்சை 2 | 03 | 0 | 0 | 01 | 01 | 0 | 02 | 04 | 02 | 01 | 01 | 0 | 01 | 0 |
| சுயேச்சை 3 | 0 | 03 | 0 | 06 | 01 | 02 | 01 | 03 | 01 | 01 | 07 | 01 | 02 | 01 |
| சுயேச்சை 4 | 0 | 02 | 05 | 05 | 01 | 05 | 02 | 01 | 02 | 01 | 01 | 0 | 01 | 0 |
| சுயேச்சை 5 | 04 | 01 | 03 | 05 | 04 | 03 | 05 | 02 | 01 | 01 | 01 | 02 | 02 | 01 |
| சுயேச்சை 6 | 01 | 02 | 03 | 03 | 03 | 03 | 07 | 10 | 05 | 01 | 01 | 02 | 02 | 0 |
| சுயேச்சை 7 | 05 | 11 | 22 | 52 | 13 | 03 | 11 | 10 | 16 | 11 | 06 | 10 | 03 | 05 |
| சுயேச்சை 8 | 09 | 11 | 07 | 18 | 16 | 08 | 12 | 16 | 06 | 07 | 05 | 03 | 10 | 01 |
| சுயேச்சை 9 | 18 | 21 | 18 | 24 | 18 | 18 | 20 | 39 | 07 | 24 | 12 | 03 | 10 | 01 |

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 2,68,131 - 5
ஐக்கிய தேசிய முன்னணி - 3,13,859 - 6
ஜாதிக ஹெல உறுமய - 42,192 - 1

## மாத்தறை மாவட்டம்

| கட்சி | தெனியாய | கம்புறுப் பிட்டிய | வெலிகம | தெவிநுவர | ஹக்மன | மாத்தறை | அக்குரஸ்ஸ | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 33051 | 31927 | 34824 | 30360 | 34158 | 32967 | 35747 | 8201 |
| ஐ.தே.மு. | 23262 | 16879 | 19996 | 16423 | 18582 | 19458 | 21318 | 3665 |
| ஐக்கிய சோஷலியக் கட்சி | 376 | 167 | 204 | 148 | 226 | 146 | 253 | 06 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 123 | 102 | 92 | 99 | 118 | 84 | 91 | 09 |
| ஜாதிக ஹெல உறுமய | 1197 | 1988 | 2462 | 2331 | 1421 | 4309 | 1733 | 788 |
| புதிய இடதுசாரி முன்னணி | 29 | 17 | 36 | 16 | 18 | 52 | 20 | 04 |
| லிபரல் கட்சி | 08 | 04 | 06 | 07 | 14 | 04 | 06 | 01 |
| இலங்கை தேசிய முன்னணி | 05 | 02 | 06 | 03 | 04 | 02 | 07 | - |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 01 | 02 | 01 | 03 | 05 | 08 | 01 | - |
| சுவராட்ய கட்சி | 02 | 01 | 04 | 07 | 03 | 03 | 06 | - |
| பூமிபுத்திர கட்சி | 03 | 07 | 05 | 04 | 05 | 04 | 05 | - |
| சுயேச்சை குழு 1 | 11 | 07 | 07 | 06 | 10 | 07 | 04 | - |
| சுயேச்சை குழு 2 | 12 | 04 | 04 | 03 | 06 | 03 | 02 | - |
| சுயேச்சை குழு 3 | 08 | 03 | 05 | 05 | 02 | 06 | 06 | 01 |
| சுயேச்சை குழு 4 | 03 | 01 | 03 | 02 | 05 | - | 08 | 01 |
| சுயேச்சை குழு 5 | 12 | 01 | 05 | 05 | 07 | 03 | 01 | - |
| சுயேச்சை குழு 6 | 36 | 07 | 20 | 04 | 15 | 10 | 25 | 07 |
| சுயேச்சை குழு 7 | 63 | 21 | 37 | 15 | 34 | 25 | 49 | 01 |

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு - 2,41,235 - 5
ஐக்கிய தேசிய முன்னணி - 1,39,633 - 3
ஜாதிக ஹெல உறுமய - 16,229 - 0

## மாத்தளை மாவட்டம்

| கட்சி | தம்புள்ள | லக்கல | மாத்தளை | ரத்தோட்டை | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 40616 | 21307 | 18496 | 22747 | 5093 |
| ஐ.தே.மு. | 29456 | 18784 | 24058 | 25330 | 3014 |
| ஐக்கிய சோஷலிச கட்சி | 264 | 220 | 263 | 383 | 05 |
| பூமி புத்திர கட்சி | 09 | - | 05 | 04 | - |
| தேசிய மக்கள் கட்சி | 77 | 29 | 67 | 90 | 04 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 64 | 34 | 81 | 81 | 03 |
| ஜாதிக ஹெல உறுமய | 1982 | 579 | 3135 | 2611 | 512 |
| புதிய இடதுசாரி முன்னணி | 33 | 10 | 31 | 32 | 03 |
| றுகுணு மக்கள் கட்சி | 05 | 01 | 01 | 07 | 01 |
| லிபரல் கட்சி | 05 | 01 | 15 | 05 | 01 |
| இலங்கை முஸ்லிம் கட்சி | 11 | 01 | 05 | 03 | 00 |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 04 | 03 | 01 | 01 | 00 |
| இலங்கை தேசிய முன்னணி | 02 | 11 | 01 | 06 | 00 |
| சுவராஜ்ய கட்சி | 03 | 03 | 02 | 02 | 00 |
| சுயேச்சைக் குழு 1 | 09 | 05 | 13 | 05 | 01 |
| சுயேச்சைக் குழு 2 | 04 | 04 | 07 | 03 | 01 |
| சுயேச்சைக் குழு 3 | 13 | 16 | 15 | 20 | 00 |
| சுயேச்சைக் குழு 4 | 02 | 02 | 03 | 05 | 01 |
| சுயேச்சைக் குழு 5 | 10 | 11 | 12 | 14 | 01 |
| சுயேச்சைக் குழு 6 | 99 | 43 | 48 | 80 | 01 |

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 1,08,259 - 3
ஐக்கிய தேசிய முன்னணி - 1,00,642 - 2

## First HAPPY BIRTHDAY
## EFFIEA
07.04.2004



**கில்றோய் ~ சர்மிளா தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி EFFIEA**

இன்று (07.04.2004) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பாட்டி, அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி அன்ரி, அங்கிள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் புனிதலூர்து அன்னையின் அருள்பெற்று சீரும்சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்..

- அம்மப்பா
(A.T.A. தேவராசா).

சென்.மேரிஸ் லேன், பருத்தித்துறை.

(30464)(34-21-12-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொண்டலடி ஞானவைரவர்
சனசமூக நிலையத் தலைவரும்,
சிறந்த சமூகசேவையாளருமாகிய
**திரு.யோசேப் நல்லையா**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 26.02.2004 அன்று நீதிவான் S.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது சேவைகள் மேலும் உயர்வடைய உளமார வாழ்த்துகின்றோம்.

(30502)
(21-12-18)

கொண்டலடி ஞானவைரவர்
சனசமூக நிலையத்தினரும்,
கொண்டலடி வாழ் மக்களும்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

2003 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரக் கல்வி கற்பதற்கு தகுதிபெற்ற எமது ஊரைச் சேர்ந்த பின்வரும் மாணவர்களை எமது நிலையத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. மகேஸ்வரன் கஜந்தன் - யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
2. யோகராசா டனீஸ் - யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
3. அன்ரனிதேவபாலன் விஜித்டிலக்ஷன் - யா/மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை
4. பாலகிருஷ்ணன் ரதீஸ் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
5. யோகேந்திரன் கீர்த்திகா - யா/மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை
6. கந்தசாமி டயானா - யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
7. பாலசிங்கம் டர்ச்சாயினி - யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

- நிர்வாகி.

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சனசமூக நிலையம்,
யுத் யூனியன் விளையாட்டுக்கழகம்,
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.

(30536)(21-12-18)

## இரவுப்பணி முகாமையாளர்
## இரவுப்பணிநிலை அலுவலர்

எழுபதுக்கும் மேற்பட்ட இரவுப்பணியாளர்களை மேற்பார்வை செய்தல், அவர்களின் பணிகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தைக் கவனித்தல் ஆகியனவற்றைத் திறம்பட ஆற்றக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இரவுப்பணி செய்வதில் அனுபவம் உள்ளவர்களாகவும் ஒட்டுமொத்த மேற்பார்வைத் திறன் உடையவர்களாகவும் இருத்தல் அவசியம்.

சேவைக்கால அனுபவம், பணிசெய்த நிறுவனம், கல்வித்தகைமைகள், நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

அனுபவம் அற்றவர்களுக்கு மூன்றுமாத காலம் பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள், பூரணமான சுயவிவரங்களுடன் 10.04.2004 இற்கு முன்னர் அனுப்பவேண்டிய முகவரி.

நிர்வாக முகாமையாளர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

## தபால் ஊழியர் பாராட்டிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

நெடுந்தீவு பிரதம தபாலகத்தில் கடந்த 30வருடங்களாக தபால் ஊழியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள இராமநாதன் நடராசாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தபாலகத்தில் நடைபெற்றது.

பிரதம தபாலதிபர் நா.தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவு அரசியல் துறையைச் சேர்ந்த அருண், எழில் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர். (எ)

## உடன் தேவை

பெண்களுக்கான சகல ஆடைகளும் தைப்பதில் அனுபவம் உள்ள பெண்கள் உடன் தேவை.

தொடர்பு:
**து.தெட்சணாமூர்த்தி,**
140.அரசடிறோட். கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

(30499)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் **வணிகமாணி** பட்டம் பெற்றவரான

செல்வன் கதிர்காமத்தம்பி
**சுதாகரன்**
B.Com.(Acc.Spl.)

அவர்களை நாங்கள் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பட்டங்களைப்பெற்று சரோடும் சிறப்போடும் வாழ இறைவனை வேண்டிப பிரார்த்திக்கின்றோம்.

பிரியமுடன் நண்பர்கள்
முரளி, கோகுலன்,
பரமேஸ்வரன்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(30487)(37-12-18)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி பிராங்லின் றொமில்டா
தம்பதியினரின் செல்வப்புதல்வி

## ஷரோனி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.04.2004) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், மாமாக்கள், அத்தைமார், பூட்டன், பூட்டிமார் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.



07 04 2004

இல 11 சென்.ஜேம்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

அ.இராசநாயகம்
(பேரன்) J.P.

(30543) UTHAYAN GRAPHIC

## சுயாட்சித் தமிழ் அரசா?
## சுதந்திர தமிழ் ஈழமா?
## சிங்கள தேசம் முடிவு செய்யட்டும்.....!



நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேச மக்களிடம் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதி மேற்படி விடயத்துக்கு ஆணையிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் கோரியிருந்தன.

அதன் அடிப்படையில் தமிழ்த் தேச மக்கள் 6,33,654 வாக்குகளை வழங்கி 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்து மிகப் பெரிய வெற்றியை வழங்கியமைக்காகவும், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்தில் 2,57,320 வாக்குகளை வழங்கியமைக்காகவும், எனக்கு (இல.3) 42,191விருப்பு வாக்குகளை வழங்கி யமைக்காகவும் வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்வதற்குப் பூரண ஆதரவை வழங்கிய அனைவருக்கும் விசேடமாக வடமராட்சிப் பகுதி மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளான மரபு வழித் தாயகம், தேசியம்,, தன்னாட்சி உரிமை ஆகியவற்றிற்காக உழைப்பேன் என்றும், யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு எனது பணியைத் தொடர்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல கிராமங்களுக்கும் கூடிய விரைவில் நேரில் வந்து நன்றி தெரிவிப்பேன் என்பதையும், மக்களுடைய பணியில் முழுமையாகத் தொடர்ந்து ஈடுபடுவேன் எனவும் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

மக்கள் பணியில்,
**எம்.கே.சிவாஜிலிங்கம்**
நாடாளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.

கைத்தொலைபேசி இல.: 0777 729020
657, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 6097

56, பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.
தொலைபேசி இல. 021 226 3274

44C, சமிட் பிளாட்ஸ்,
கெப்பிட்டிபொல வீதி,
கொழும்பு - 05.
தொலைபேசி இல.: 011 2559644

44C,SUMMIT FLATS
KEPPITIPOLA ROAD,
COLOMBO - 5.

(30534) (24-21-12-18)